பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 02 ஞாயிற்றுக்கிழமை 16.05.2021 கதிர் 192


### இது ரகசியம் அல்ல!

சில விடயங்களைப் பச்சையாகவும், கொச்சையாகவும் எழுத வேண்டி இருக்கின்றது. வாசகர்கள் அதற்காக மன்னிப்பார்களாக.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வயது மூப்பினால் நலிவுற்றிருக்கின்றார். மூன்று மாதங்களாக

பக்கம்02

# இலங்கையில் இப்போதும் தொடர்கின்றது இனவழிப்பு!

## கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் திட்டவட்டம்

(ந.லோகதயாளன்)



இலங்கையில் இனப்படுகொலை நடந்தது; இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

## நேற்று மட்டும் 2,386 பேருக்கு கொரோனா

இலங்கையில் நேற்று மாத்திரம் 2 ஆயிரத்து 386 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 471 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 220 பேர் 2

## கொரோனாச் சாவு 941 ஆக அதிகரிப்பு

### நேற்றும் 20 பேர் காவு

இலங்கையில் நேற்று 20 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 941 ஆக அதிகரித்துள்ளது 2

## இலங்கையைக் கொரோனா வதைக்க அரசின் சர்வாதிகாரச் செயலே காரணம்

### ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம்

இலங்கையைக் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாம் அலை தீவிரமாகத் தாக்க அரசின் சர்வாதிகாரச் செயல்களே காரணமாகும். அரசியல் தேவைகளை நிறைவேற்றவும் நெருங்கிய நண்பர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் கொரோனாத் தொற்றைப் பயன்படுத்தும் அரசின் மனிதாபிமானமற்ற செயல்களை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புத்தியை முதலில் 05

## வடக்கில் 61 பேருக்கு தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 36 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 61 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் 2




## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்துக்கே சமுகம் தரவில்லை. இந்த வாரம் சபைக்கு அவர் வராவிட்டால், அவர் விடுமுறைக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். இல்லையேல் அவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் சபைக்கு சமுகம் தராமைக்காக எம்.பி. பதவியை இழந்தவராகிவிடுவார் என்பதை முற்கூட்டியே ஒரு தடவை இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அவர் அப்படி இருப்பதால் ‘அண்ணன் எப்ப சாவான், திண்ணை எப்ப காலியாகும்’ எனச் சிலர் பார்த்திருக்கின்றனர். அது பற்றிய குறிப்பு இது.

நேற்றுக் காலை தொலைக்காட்சிப் பேட்டி நிகழ்வு ஒன்றில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் செவ்வியளித்துக் கொண்டிருந்தார்.

*“கூட்டமைப்பின் தலைமைப் பதவி உங்களுக்கு வழங்கப்பட்டால் அதை ஏற்றுக் கொள்வீர்களா?”* – என்று அவரிடம் கேட்கப்பட்டது.

*“வழங்கப்படுகின்ற வேளையில்தான் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். பாலர் வகுப்பு படிக்கும் பிள்ளையிடம் உனக்கு ‘ஓ.எல்’ முடிவு இப்படி வந்தால் நீ என்ன படிப்பைத் தெரிவு செய்வாய் என்று கேட்கக் கூடாது. அந்தப் பரீட்சை முடிவு வரும்போதுதான் அது குறித்துக் கேட்க வேண்டும்.”* – என்றார் சுமந்திரன்.

*“அப்படி என்றால் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை ஏற்கும் தகுதி நிலையில் நீங்கள் இல்லை என்று கூறுகின்றீர்களா?”*

*“இல்லை. நான் தகுதியைப் பற்றிக் கூறவில்லை. ஓர் அரசியல் கட்சியின் தலைவராக இருக்க வேண்டும் என்று நான் அரசியலுக்குள் வரவில்லை. ஓர் அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு என்னுடைய பங்களிப்பை வழங்குவதற்கான திறமை என்னிடம் இருக்கின்றது என்று தெரிந்துதான் நான் அரசியலுக்குள் வந்தேன். ஆனால் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் சில பொறுப்புக்களைத் தலைமையேற்று பங்காற்றும் கடப்பாடு என் தோள் மீது வந்து பல தடவைகளில் தங்கியுள்ளது. நான் அவற்றை ஆற்றியுள்ளேன். அதற்காக நான் அரசியல் தீர்வுக்காக மட்டுமே செயற்படுவேன், மற்றவற்றைச் செய்ய மாட்டேன் என்று கூறி நான் ஒதுங்கவில்லை. ஆகையினால், அப்படியான ஒரு பொறுப்பு எப்போதோ ஒரு காலத்தில் வருமாக இருந்தால் அதை நான் எடுத்துச் செய்வேன். இதை நான் சொல்வதற்குத் தயங்கக் காரணம் உண்டு. நான் இப்படிச் சொல்லி விட்டால் நாளை இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் பகிரங்கப்படுத்துகின்ற போது ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை ஏற்க சுமந்திரன் தயார்’ என்ற தலைப்பைப் போட்டு அறிவிப்பு வெளியிடுவீர்கள். அது நான் கூறும் கருத்துக்கு மாறானதாக இருக்கும். அதனால்தான் இதை கூற நான் தயங்கினேன்.”* – என்று முத்தாய்ப்பு வைத்தார் சுமந்திரன்.

அடுத்த கட்டத் தலைவராக உங்களை சம்பந்தன் வளர்க்கின்றாரா என்ற கேள்விக்கு, இல்லை என்று பதிலளித்த சுமந்திரன் அப்படி எந்த எண்ணமும், சமிக்ஞையும் சம்பந்தனிடமிருந்து வெளிப்படுத்தப்படவில்லை, தேவைப்படும் போது தலைவர்கள் உருவாகுவார்கள் என்று சம்பந்தன் கருதுகின்றார் என்ற சாரப்படவும் பதிலளித்தார்.

இந்த முக்கால் மணி நேர செவ்வியைப் பார்த்த பின்னர் நேற்று முற்பகல் சுமந்திரனுக்கு ஓர் அழைப்பு எடுத்தேன். ‘ஹலோ’ என்ற வார்த்தை அவரிடம் இருந்து கிடைத்ததும் நான் நேரடியாகவே என் கேள்வியைக் கொக்கியாக அவரிடம் மாட்டினேன்.

*“கூட்டமைப்புப் பேச்சாளரிடம் ஒரு நேரடிக் கேள்வி. எப்போதாவது கூட்டமைப்புக்குத் ‘துணைத் தலைவர்’ என்று யாரையாவது தெரிவு செய்தீர்களா?”* – இது என் கேள்வி.

*“இல்லை. ஒரு போதும் இல்லை. அப்படி ஒரு தெரிவு ஏதும் எப்போதும் நடக்கவில்லை.”* – என்றார் அவர்.

*“நன்றி. நல்ல பதில்”* – என்றேன் நான்.

*“ஏன் இந்தக் கேள்வி இப்போது?”* – என அவர் வினா தொடுத்தார்.

*“நாளை பத்திரிகையைப் பாருங்கள். உங்கள் கேள்விக்குப் பதில் இருக்கும்.”* – என்றேன் நான்.

*“உங்கள் போட்டியை முழுமையாக காலையில் பார்த்தேன். நன்றாகப் பதில் அளித்தீர்கள். சுவாரஸியமாக இருந்தது.”* – என்றும் கூறினேன்.

*“ஓம். ஓம். உங்களுக்கு முன்னர் மாவை அண்ணன் அழைப்பு எடுத்துப் பேசினார். அவரும் கேள்விகளுக்கு பொறுப்பாகவும் சிறப்பாகவும் நான் பதிலளித்தேன் எனப் பாராட்டினார்.”* – என்றார் சுமந்திரன்.

நான் கெக்கட்டம் விட்டுச் சிரித்தேன். அவர் ஏன் சிரிக்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்கும் நாளைய (இன்றைய) பத்திரிகையைப் பாருங்கள், விளக்கம் இருக்கும் என்றேன் நான்.

சரி. இனி நாம் விடயத்துக்கு வருவோம்.

‘அண்ணன் எப்ப சாவான்; திண்ணை எப்ப காலியாகும்...!’ – என்பதுதான் இப்போது சர்ச்சை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தலைவர் என சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டமை உண்மை. துணைத் தலைவர் என யாரும், எப்போதும் தெரிவு செய்யப்படவில்லை.

அப்படி இருக்கையில் சம்பந்தன் சுகவீனமுற்று, நலிவுற்று, வெளியில் தோன்றுவதைக் குறைத்துக் கொண்டதும், மாவை சேனாதிராசா வழமைபோல தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார்.

தம்பாட்டில் தம்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் என்று அவர் போடத் தொடங்கி விட்டார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பாக தாம் ஊடகங்களுக்கு தமது மின்னஞ்சல் முகவரியிலிருந்து நேற்று அனுப்பி வைத்த அறிக்கையில் கூட. ‘மாவை.சோ. சேனாதிராசா, தலைவர், இ.த.க.கட்சி; துணைத் தலைவர், த.தே.கூட்டமைப்பு’ – என்றுதான் அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய தெரிவுகள் ஏதும் நடக்காத நிலையில் – அடுத்து அவருக்குத்தான் அது கிட்டலாம் என்று அவரும் அவரைச் சூழ்ந்தோரும் கருதினால் கூட – அவர் தமக்குத் தாமே அந்தப் பதவியைச் சூடிக் கொள்வது, ‘பதவியாசை’ என்றுதான் கருதப்பட வேண்டும்.

சம்பந்தனுக்குப் பிறகு அந்தப் பதவி யாருக்கும் போய் விடக் கூடாது, தமக்குரியது அது என்று கருதி, இப்போதே அரண் கட்டும் சுயதப்பிலித்தனம் இது.

அந்தப் பதவிக்குத் தாம் போட்டிக்கு வரவில்லை என்ற சாரப்பட சுமந்திரன் அளித்த பேட்டி நிச்சயம் மாவையர் வயிற்றில் பாலை வார்த்திருக்கும். அதனால்தான் அந்தப் பேட்டிக்கு அவ்வளவு பாராட்டு மாவையரிடமிருந்து. பாராட்டுக்குக் காரணம் சுமந்திரனுக்கு இப்போது விளங்கும் என நினைக்கின்றேன்.

திடீரென கூட்டமைப்பின் ‘துணைத் தலைவர்’ பதவிக் கிரீடத்தைத் தனக்குத் தானே – முந்திக் கொண்டு – மாவை சூடிக் கொண்டமைக்குக் காரணம் ‘அண்ணன் எப்ப சாவான், திண்ணை எப்ப காலியாகும்’ என்ற எதிர்பார்ப்பில்தான்.

இது ஒன்றும் அவருக்குப் புதிதல்ல.

ஆனந்தசங்கரியிடம் கேட்டால் இன்னும் பல கூறுவார். தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த நீலன் திருச்செல்வத்தின் உடல், குண்டு வெடித்த இடத்திலிருந்து அகற்றப்பட முன்னரே, அவரின் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியைப் பெறத் துள்ளிக் குதித்து உரிமை கோரி ஒற்றைக்காலில் நின்றவர் பற்றிய உண்மைக்கு சங்கரியர் இன்னும் சாட்சியமாக உள்ளார். அமிர்தலிங்கம் இறப்பின் போதும் இதுதான் நடந்தது. சங்கரியிடம் கேட்டால் விவரமாக விவரிப்பார்.

இப்போது இரண்டு வித்தியாசங்கள். அவை, இறந்த கையோடு கேட்டவை. இது அதற்கு முன்னரேயான ஏற்பாடு; அவை எம்.பி. பதவிக்கான எத்தனம். இது கூட்டமைப்புத் தலைமையை வளைத்துப் போடும் முயற்சி.

முதலமைச்சர் பதவியில் இருந்து எல்லாவற்றுக்கும் பதவி ஆசை. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இப்போதுதான் – கடந்த எட்டு, ஒன்பது மாதங்கள் தாம் – முதல் தடவையாக எம்.பி. பதவி இல்லை. இந்த சொற்ப காலம் கூட பதவி சுகம் அனுபவிக்காமல் நம் தலைவரால் இருக்க முடியவில்லை. போதாக் குறைக்கு மாகாண சபைக்குள்ளாவது பூரலாம் என்றால் அதற்கும் தேர்தல் நடத்துகின்றார்கள் இல்லை.

குறைந்த பட்சம் கூட்டமைப்புத் தலைவர் பதவியைப் பிடித்தால்தான் முதலமைச்சர் பதவியோ, தேசியப் பட்டியல் எம்.பி. பதவியோ, அதனைச் சுருட்டலாம். அதற்காகத்தான் எல்லாம்.

‘சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?’

– மின்னல் –

---

## இலங்கையில் இப்போதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் தனியார் வானொலி ஒன்றுக்கு நேற்று அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் இனப்படுகொலை நடந்தது. இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், இந்த இனப்படுகொலையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிரூபிக்கும் விடயத்தில் நாம் கவனமாகப் பேச வேண்டும். அதை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் இன்னும் எம்மிடம் இல்லை என்பதே எனது நிலைப்பாடு.

அண்மையில் இணையவழி கலந்துரையாடல் நடந்தது. அதில் விக்னேஸ்வரன், சம்பந்தன் போன்றவர்களும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நவநீதம்பிள்ளையிடம் 3 கேள்விகள் கேட்கப்பட்டன . அதில் 2 கேள்விகள் இனப்படுகொலை தொடர்பானவை.

இனப்படுகொலை தொடர்பான முதலாவது சர்வதேச நீதிமன்ற விசாரணையுடன் தொடர்புபட்டவர் என்ற அடிப்படையில் நவநீதம்பிள்ளை ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். அந்தச் சொல்லை (இனப்படுகொலை) கவனமாகப் பாவிக்க வேண்டும். அது சட்ட வியாக்கியானமான சொல். சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் அந்தச் சொல்லைப் பாவிக்க வேண்டாம்; ஊடகவியலாளர்கள் அதைப் பாவிப்பார்கள் என்று கூறினார்.

தற்போதும் எமது வரலாற்றை, பண்பாட்டை அழிக்கும் இனப்படுகொலையின் கூறுகள் இடம்பெற்று வருகின்றன. மக்களைப் பலவந்தமாக ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு செல்லப்படுவது இனப்படுகொலை. ஆஸ்திரேலியாவில் பழங்குடியினரை பலவந்தமாக இடம் மாற்றிய வழக்கில் ஒரு நீதிபதி அதை இனப்படுகொலை எனக் கூறினார். ஏனைய இருவரும் அதற்கு மாறாகத் தீர்ப்பளித்தனர்.

இந்தச் சொல்லை சட்டரீதியாக நிரூபிக்க கவனமாகச் செயற்பட வேண்டும். அது சட்டநுணுக்கமான விடயம்.

வடக்கு மாகாண சபை இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியதாகக் கூறுகின்றார்கள். அதில், ‘கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை’ என்றே கூறப்பட்டுள்ளது. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை சர்வதேச குற்றமாக இன்னும் இணைக்கப்படவில்லை என்றும், அதைக் குற்றமாக இணைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். அதாவது இனப்படுகொலை நடக்கவில்லை என்றே அத்தீர்மானமும் கூறுகின்றது – என்றார்.

---

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடம் என்பவற்றில் 858 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 36 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேரும், வவுனியா மாவட்டத்தில் 11 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 பேரும் என 61 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் பிரிவில் சேர்க்கப்பட்ட 3 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் தொற்றாளர்களுடன் முதல்நிலைத் தொடர்பாளர்களாக சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தரும்புரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 18 பேருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 16 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருவருக்கும் என 36 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 15 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக (கச்சேரி) உத்தியோகத்தர்களாவர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 2 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி நொதேர்ன் சென்றல் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

---

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணமடைந்துள்ளனர் எனவும், 22 ஆயிரத்து 330 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தொற்றால் அழிவில் பிரேஸில்; இலங்கையோடு ஒப்பிடும் ஹர்ஷ டி சில்வா

கொவிட் தொற்று நோய் பரவல் காரணமாக மோசமான அழிவை எதிர்நோக்கி வரும் பிரேஸில் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் கொவிட் கட்டுப்பாடு சில ஒற்றுமைகளைக் காணக் கூடியதாக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆட்சியாளரின் பொறுப்பற்ற தன்மைக்கு இணையான நிலைமை கொவிட் நிலைமையிலும் நாட்டில் காணமுடிகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். பிரேஸில் நாட்டில் 11 செனட் உறுப்பினர்கள் அடங்கிய விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஏன் இந்தளவுக்கு மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இதற்கு ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டுமா என்பதை அறிய இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அப்படி அரசாங்கமும்



ஜனாதிபதியும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டுமாயின் பிரேஸில் ஜனாதிபதி போல்சேனானாரோவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கான பரிந்துரைகளை இந்த விசாரணைக் குழு வழங்கும்.

இலங்கையிலும் ஆரம்பத்தில் சிரித்தனர். ஏன் நாட்டை முடக்க வேண்டும் என்று கேட்டனர். கலசங்களை ஆற்றில் போட்டனர். அதன் பின்னர் பாணி மருந்தை அருந்தினர். அதேபோல் இலங்கையில் நான்கு சுகாதார அமைச்சர்கள் இருக்கின்றனர்.

அதேபோல் இராணுவத்தின் ஜெனரல் ஒருவரே கொவிட் கட்டுப்பாடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார். எனினும் பிரேஸில் நாட்டை விட இலங்கையில் குறைவான எண்ணிக்கையிலேயே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு சத வீதமானனோருக்கே இரண்டாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் பொறுப்பற்ற செயல் என்றால், இதுவும் அப்படியான பொறுப்பற்ற செயல் அல்லவா?.

அரசாங்கம் தேவையான நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை ஏற்பட்டிருக்காது. இதனைப் புள்ளிவிபரங்களோடு ஒப்புவிக்க முடியும். சுகாதாரம் தொடர்பான விசேட நிபுணர்களும் இதனையே எமக்கு சுட்டிக்காட்டியுள்ளனர் என ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - 076 443 8622







## முள்ளிவாய்க்கல் நினைவேந்தல் விடயத்தில் மாத்திரம் நாட்டின் மீது பொலிஸாருக்கு அக்கறை ஏற்பட்டுள்ளதா?

### துரைராசா ரவிகரன் கேள்வி



முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக குருந்தூர்மலையில் சுகாதார நடைமுறைகளை மீறி சிங்களவர்கள் பௌத்த விழா எடுக்கும்போது வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்த முல்லைத்தீவு பொலிஸாருக்கு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விடயத்தில் மாத்திரம் நாட்டின்மீது அக்கறை ஏற்பட்டுள்ளதா? என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதுள்ள கொரோனாத் தொற்று அசாதாரண நிலையைக்காரணங்காட்டி, முல்லைத்தீவுப் பொலிஸார், நினைவேந்தலை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு நீதிமன்றினூடாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்டவர்களுக்கு எதிராகத் தடைக்கட்டளைகளைப் பெற்றுள்ளனர்.

அவ்வாறு பெற்றுக்கொண்ட தடைக்கட்டளையை நேற்று சனிக்கிழமை முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் கையளித்திருந்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.










## பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு உயர்தர கற்கை

புதிய மறுசீரமைப்பின் ஊடாகஎட்டுமாதங்களுக் முன்னர் பாடசாலை கல்வியை முடித்துக் கொண்ட பிள்ளைகளுக்குஉயர்தரக்கற்கைநெறிகளுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்பீரிஸ்தெரிவித்துள்ளார்.

கல்விமறுசீரமைப்புதொடர்பாக கலந்தாலோசிக்கப்படுகின்றது. பல்வேறு நாடுகளில் 21 வயதை அடையும் போது, பிள்ளைகள் பட்டப்படிப்பை முடித்துக் கொள்கின்றார்கள். இலங்கை மாணவர்களுக்கும் இவ்வாறான வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

பத்தாம், 11 ஆம் வகுப்பிற்காக இதுவரை இருந்த கால வரையறை ஒன்றரை வருடமாகக் குறைக்கப்படவுள்ளது. இறுதி இரண்டு வருடங்களுக்குள் இதன் பலன்களை மாணவர்களுக்கு வழங்குவது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அட்டூழியப் பொலிஸ் இது!

சத்தம், சந்தடியின்றி – வெளி ஆரவாரங்கள் இல்லாமல் – ஒரு பெரும் அராஜகம், அட்டூழியம் நாட்டில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

அமைதி பேணுவதன் மூலம் – வாயை மூடிக் கொண்டிருப்பதன் வாயிலாக – இந்த அநீதி தொடர்ந்து அரங்கேறுவதற்கு நாமும், மக்களும், சமூகமும் அதற்குத் துணை போய்க் கொண்டிருக்கின்றமைதான் பெரும் துரதிஷ்டம்.

பஞ்சமா பாதகங்களைச் செய்பவர்கள் அழிக்கப்படுகின்றார்கள், பார்த்திருப்போம் என்று அந்த அராஜகத்துக்கு தனது மௌனம் மூலம் அங்கீகாரம், ஆசீர்வாதம் அளித்துப் பார்த்திருக்கின்றது நாடு.

தமிழர்கள் அவர்களின் தாயகத்தில் கொன்றொழிக்கப்பட்ட போது – 'பயங்கரவாதத்தை ஒழிக்கின்றோம்' என்ற பெயரில் அட்டூழியங்கள் ஆர்ப்பரித்த போது – தென்னிலங்கைச் சிங்களம், பார்த்திருந்து அதை அங்கீகரித்தமை மட்டுமல்லாமல் இன்று வரை அந்தக் கொடூரங்களை நீதி முறையான நடவடிக்கை என்றே நியாயப்படுத்தியும் நிற்கின்றது.

தவறை, தவறான முறையில் சரி செய்ய முற்படுவதும் தவறு தான். அதை நீதி என்று ஏற்றுக் கொள்ள முடியாது. சரி என்று அங்கீகரிக்க இயலாது.

அதுவும், நாட்டில் எந்தத் தவறு நிகழ்ந்தாலும் – எந்தக் குற்றம் இழைக்கப்பட்டாலும் – அதனைக் கையாள்வதற்கு சட்ட ரீதியான ஒரு முறைமை இருக்கும்போது, அதனை விடுத்து, சட்டத்தை அரசு கையில் எடுத்து, சட்டத்துக்குப் புறம்பாக செயற்பட அனுமதிக்கக் கூடாது. அப்படிச் செயற்பட அனுமதித்தால் – அப்படித் தவறுகள், அநீதிகள் இடம்பெறுவதற்கு நாம் இடமளித்துப் பார்த்திருந்தால் – அதுவே முன்னுதாரணமாகி, முழு நாட்டையுமே எதிர்காலத்தில் சிக்கலில் ஆழ்த்தி விடும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், பாதாள உலகக் குழுவினரைக் கையாள்வதற்கு நாட்டில் சட்டம், ஒழுங்கு, நீதி முறைமைகள் இருக்கின்றன. இதனைத் தாண்டி, ஆட்சித் தரப்பின் ஒரு கட்டமைப்பு இது விடயத்தில் சட்டம், நீதி முறைமைகளுக்குப் புறம்பாகச் செயற்படுவதற்கு அனுமதித்தால் அது எதிர்காலத்தில் மோசமான ஆபத்துக்களுக்கு வழி செய்யும்.

'ஆட்டில் கழித்து, மாட்டில் கழித்து, கடைசியில் மனிதர்களைக் கழிப்பது' என்று பேச்சு வழக்கில் ஒரு கூற்று உண்டு.

அப்படித்தான் இந்த விடயத்திலும். பாதாளக் கோஷ்டியினர், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் என்று அரசு முறையற்ற விதத்தில் கைவைத்து, சம்ஹாரம் செய்வதை சமூகம் பார்த்திருக்குமானால், விரைவில் அதுவே ஆளும் தரப்பினரின் அரசியல் எதிரிகளுக்கு எதிராகவும் இலகுவில் திரும்பும். ஆகவே, நாடு இதில் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது மிகவும் அவசியம்.

அண்மையில் அடுத்தடுத்த இரு நாள்களில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் உரு ஜுவா, கொஸ்கொட தர்கா என்ற இருவர் பொலிஸ் காவலில் இருக்கும் போது சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

பொலிஸ் விசாரணையில் இருக்கும் இவர்கள் மர்மமான முறையில் பாதுகாப்பு இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள், அவர்களுக்கு விபரீதம் ஏதோ நிகழப் போகின்றது என சம்பந்தப்பட்ட இருவரினதும் சட்டத்தரணிகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஊடாக பொலிஸ் மா அதிபருக்கு மின்னஞ்சல் மூலம் முன்னெச்சரிக்கைத் தகவல் அனுப்பியுள்ள நிலையிலேயே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

*"இந்தப் படுகொலைகளிலும் நீதி முறைமைக்கு மாறான அடையாளங்கள் தாராளமாக உள்ளன"* – என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பகிரங்க அறிக்கை மூலம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தன்னுடைய காவலில் இருக்கும் ஒவ்வொருவருடைய பாதுகாப்புக்கும் காவலுக்கும் அரசும் பொலிஸும் முழுப் பொறுப்பு. அந்தக் கைதிகள் எத்தகைய மோசமான குற்றங்களை இழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும், அந்தப் பாதுகாப்பை வழங்குவது நாட்டினதும் அரசினதும் முழுமையான கடப்பாடு என்பதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

சட்டத்தின் ஆட்சி இலங்கையில் இல்லை என்பதைத்தான் இந்தப் போக்கு நமக்குக் காட்டுகின்றது.

தன்னுடைய காவலில் நிராயுதபாணிகளாக இருக்கும் சந்தேக நபர்கள்களைப் பாதுகாக்க முடியாத பொலிஸ் தன்னைக் 'காவல் அணி' என்று அழைப்பதற்கே அடிப்படைத் தகுதி, தகைமை அற்றது.

யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்தோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் கையாள்வது போல, தன்னுடைய பொலிஸ் துறையில் இத்தகைய கொடூரம் – அராஜகம் – அட்டகாசம் – அரங்கேறுவதற்கு, இடமளித்து, ஊக்குவித்து, பார்த்திருக்கும் பொலிஸ் மா அதிபர் முதல் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் வரை இத்தகைய கொடூரத்துக்காக கட்டளைப் பீடத் தொடரின் (Chain of Command) அடிப்படையில் குற்றப் பொறுப்பாளப்பட்டு சர்வதேசத்தால் கையாளப்பட வேண்டும். சம்பந்தப்பட்டோர் அப்படிக் கையாளப்படுவர் என்ற எச்சரிக்கை முற்கூட்டியே உணர்த்தப்படவும் வேண்டும்.

## நினைவுத்தூபி இடித்தழிப்பு தமிழ் மக்களின் இதயங்களை நொறுக்கியமைக்குச் சமன்!



### சிறிதரன் எம்.பி. கண்டனம்

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடித்தழித்தது தமிழ் மக்களுடைய இதயங்களை அடித்து நொறுக்கியதற்குச் சமனான செயலாகும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை தமிழ் மக்களின் இதயமாக இருக்கின்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் பங்கு தந்தையர்களால் கொண்டுசெல்லப்பட்ட ஞாபக கல்லும் அடித்து நொறுக்கப்பட்டு அல்லது இல்லாமல் செய்யப்பட்டு அங்கு ஏற்கனவே 10 ஆண்டுகளாக அந்த மக்கள் வணங்கி வருகின்ற அந்த நினைவுத்தூபியையும் இடித்து நொறுக்கி இருக்கிறார்கள்.

இந்தச் செயற்பாட்டை இராணுவத்தினரும் பொலிஸாரும் சேர்ந்தே இடித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இது தமிழ் மக்களுடைய இதயங்களை அடித்து நொறுக்கியதற்குச் சமனான செயலாகும்.

2008 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் இந்த உலகப் பந்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போயும் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த முள்ளிவாய்க்கால் என்ற பிரதேசம் உலகத்திலே இன்றும் உன்னிப்பாக பார்க்கப்படுகின்ற ஓர் இடம், ஒரு பெரிய இனப்படுகொலை இந்த பூமிப்பந்தில் நடைபெற்றது.

அந்த மக்களுக்கு உணவு அனுப்பாமல் அந்த மக்கள் உணவில்லாமல் இருந்தமையையும் பச்சைக் குழந்தைகள் கஞ்சிக்காக வந்திருந்த பொழுது கொத்துக் குண்டுகளை வீசி கொல்லப்பட்டவர்களின் நினைவைக் கொண்ட ஒரு மாபெரும் வரலாற்று இடமாக இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் இருந்த அந்த இரண்டு கைகளையும் உடைத்தெறிந்து அந்த தூணையும் தகர்க்க முயற்சித்திருக்கிறார்கள். அதனுடைய பலம் காரணமாக அதனை உடைக்க முடியாமல் போய்விட்டது.

குறிப்பாக இது ஒரு தமிழ் மக்களுடைய இதயங்களை அடித்து நொறுக்கியதற்குச் சமனான செயலாகும்.

சிங்கள மேலாதிக்கம் என்பது தமிழ் மக்கள் அவர்களுடைய இறந்த உறவுகளைக் கூட நினைவு கூருவதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் அவர்களுடைய இறந்துபோன உறவுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தாங்கள் செய்கின்ற அந்த நினைவேந்தல் கடமைகளை செய்ய விடாது தடுக்கும் நோக்கோடு இந்த சிங்கள, பௌத்த மேலாதிக்க அரசாங்கத்தின் மிகவும் காட்டுமிராண்டித்தனமான இந்த செயற்பாட்டை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். – என்றார்.

## பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பலாம் உயிர்களை மீண்டும் பெறுதல் முடியாததே!

### என்கிறார் ரணில் விக்கிரமசிங்க

அடுத்த சில வாரங்களுக்குள் இலங்கையில் கொவிட் வைரஸ் தொற்று நிலைமை மிக வேகமாக அதிகரிக்கும் என உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான அலுவலகம் எச்சரித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



இப்படியான துரதிஷ்டவசமான நிலைமை ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பாக எண்ணாது, முழு நாட்டையும் முடக்கித் தொற்று நோய் நிலைமையை எதிர்கொள்வதைத் தவிர மாற்று வழி கிடையாது.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பச் சந்தர்ப்பம் இருக்கின்றது.

ஆனால், இழக்கப்படும் உயிர்களை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக நாட்டு மக்களின் உயிர்களை பலிகொடுக்கக் கூடாது எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## வடக்குக்குப் போதியளவு பி.சி.ஆர். இயந்திரங்கள் மத்திய சுகாதார அமைச்சு அனுப்பி வைத்துள்ளதாம்

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், மே 16

வட மாகாணத்திலும் கொவிட் வைரஸ் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்குத் தேவையான முழுமையான உபகரணங்கள் சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைக்குரிய உபகரணங்கள் மற்றும் பி.சி.ஆர். மாதிரிகளை சேகரிப்பதற்குரிய உபகரணங்கள் என்பன இவ்வாறு கொண்டு வரப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நினைவிடத்தை அரசும் இராணுவமும் அழித்தாலும்

# ‘முள்ளிவாய்க்கால் படுகொலை’யை வீடுகளிலிருந்து நினைவேந்துவோம்

### தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை வேண்டுகோள்

(ந.லோகதயாளன்)

**தமிழர் தேசமும் மக்களும் அழிக்கப்பட்ட வரலாறுகளையெல்லாம் தாங்கி நிற்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை அரசும் இராணுவமும் அழித்தாலும் எதிர்வரும் மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் படுகொலை’யை நாம் வாழும் இடங்களிலும், குடியிருக்கும் குடில்களிலும் நினைவுகூருவோம்.**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத்தலைவருமான மாவை சோ.சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் தேசத்தினதும் இனத்தினதும் விடுதலைக்காகவும், தங்களைத் தாங்களே ஆளுவதற்காகவும் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகின்றனர்.

கடந்த ஏழு தசாப்த காலங்களில் இந்தப் போராட்டங்களினாலும், அரசுகள் ஏவிவிட்ட இனக்கலவரங்களினாலும், இறுதிப் போராலும் பல லட்சம் மக்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளனர்; அழிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் காலகட்டங்களில் அரசுகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினாலும், பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்களமயமாக்கலினாலும் தமிழ் மக்களின் குடிப்பரம்பல் பெருவீழ்ச்சியடைந்து வருகின்றது. அத்துடன் தமிழ் மக்களின் மொழி, பண்பாடு, நாகரிகம் என்பனவும், தமிழர் தேசத்தினதும், மக்களினதும் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது.

இவ்வாறானதொரு நிலையில் தங்கள் உறவுகளைப் பறிகொடுத்த மக்கள் தங்கள் உறவுகளை நினைவு கூரவும், அஞ்சலி செய்யவும், ஆத்மசாந்திக்கான ஈமக்கடன்களில் ஈடுபடவும் உள்ள உரிமை, பண்பாடு, நாகரிகம் இலங்கையில் மறுக்கப்படுகின்றது.

அம்மக்கள் அஞ்சலி செய்ய, கண்ணீர் விட்டழுது ஆறுதல் பெற ஆன்மக் கடனாற்றவுள்ள நினைவிடங்களும், சின்னங்களும் அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் ஆன்மத்தையே அழிக்கும் செயற்பாடே கடந்த 12.05.2021 நள்ளிரவில் இராணுவம் சூழ்ந்திருக்க முள்ளிவாய்க்கால் நினைவிடத்திலும் நடந்தேறியிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தை இராணுவத்தின் பாதுகாப்புடன் அரசு சிதைத்துள்ளது.

அந்த நினைவிடத்தில் மே 18ஆம் நாள் புதிய நினைவுக்கல் நிலைநிறுத்தவும், அந்நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெறவும் ஒழுங்கமைப்புக்கள் இடம்பெற்றன. இந்தநிலையில், புதிய நினைவுக்கல்லும் அங்கிருந்து இராணுவம் சூழ்ந்திருக்க அகற்றப்பட்டிருக்கின்றது. அந்த நினைவுக்கல் இப்போது எங்கே? இலங்கை அரசு இத்தனைக்கும் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்.

தமிழர் தேசமும் மக்களும் அழிக்கப்பட்ட வரலாறுகளையெல்லாம் தாங்கி நிற்கின்றது முள்ளிவாய்க்கால் நினைவிடம். இத்தகைய வரலாற்றைப் பிரதிபலிக்கும் முள்ளிவாய்க்கால் அத்திபாரத்திலிருந்துதான் தமிழ்த் தேசிய இனம் விடுதலை வரலாற்றைப் படைக்கப் போகின்றது. அந்த வரலாற்றுத் தீர்மானத்தை எதிர்வரும் மே 18 அன்று நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிறைவேற்றுவோம். இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்று சர்வதேசமயப்பட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி கிறிஸ்தவ ஆயர்கள் கொரோனா வைரஸ் தீவிரத்தையும் கடந்து அர்த்தமுள்ள ஆனால் காத்திரமான அறிக்கையின் மூலம் தமிழ்த் தேச மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளமை எழுச்சிகொள்ள வைக்கின்றது.

கொரோனா வைரஸ் பல திரிவுகளாகப் பரவி தீவிரமாக உயிர்களைப் பலியெடுத்து வருகின்றது. எமது பிரதேசங்களிலும் பல லட்சம் மக்களைப் இனப் போரில் பலி கொடுத்துவிட்ட நிலையிலும் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கும், உயிர்களைக் காக்கவும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் கட்டுப்பாடுகளை ஏற்று நாமே நம்மைப் பாதுகாக்கும் வழிவகைகளைப் பின்பற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்.

எனவே, மே 18 அன்று இதுவரை அடைந்த அவலங்கள், துயரங்களை நெஞ்சில் இருத்தி இலட்சியத் தாகத்தை இதயத்தில் நிறைத்து வாழும் இடங்களிலும், குடியிருக்கும் குடில்களிலும் எமது உறவுகளை நினைவு கூர்ந்து மாலை 6 மணிக்கு மணி ஒலி எழுப்பிச் சுடரேற்றி விளக்கேற்றி திடசங்கற்பத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவலைகளைப் பாரெல்லாம் பரப்பி நிற்போம் என அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது.

## நினைவேந்தலுக்குத் தடை கோரிய பொலிஸின் விண்ணப்பத்தை நிராகரித்தது யாழ்.நீதிமன்றம்

(எஸ்.நிதர்ஷன்)

‘மே 18’ முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி கோப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நிராகரித்தார்.

சம்பவம் இடம்பெறப் போவதைத் தடுக்கக் கோரும் ‘ஏ’ அறிக்கையை தாக்கல் செய்யாது, சட்டம் மீறப்பட்டதாகக் கண்டறியப்பட்டால் ‘பி’ அறிக்கையில் தாக்கல் செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர்போல் உத்தரவிட்டார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளைக் கோப்பாய் பொலிஸ் பிரிவில் தடை செய்யக் கோரி பொலிஸாரால் நேற்று ‘ஏ’ அறிக்கையில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இலங்கை குற்றவியல் சட்டம் 106ஆம் பிரிவு மற்றும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த ‘ஏ’ அறிக்கையை கோப்பாய் பொலிஸார் முன்வைத்தனர்.

நினைவேந்தல் நிகழ்வுகளால் சட்டம் மீறப்பட்டதாகக் கண்டறியப்பட்டால் ‘பி’ அறிக்கையின் கீழ் விண்ணப்பம் செய்யுமாறு உத்தரவிட்ட நீதிவான், கோப்பாய் பொலிஸாரால் தடை கோரிய ‘ஏ’ விண்ணப்பத்தை நிராகரித்தார்.

## இலங்கையைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இழந்தால், அழிவு இரண்டாவதாகப் பின்தொடரும் என்று ஒரு பழமொழி உண்டு. அரசின் நடவடிக்கைகளை நோக்குமிடத்து இதைத்தான் இன்று அது செய்து வருகின்றது. கொரோனாத் தொற்று நோயின் கட்டுப்பாட்டை அரசு இழந்துவிட்டது.

நாளாந்தம் இறப்பவர்களின் எண்ணிக்கை இப்போது கிட்டத்தட்ட 30 இற்கும் மேலாக உயர்ந்துள்ளது. இன்று அரசு மிகத் துல்லியமான தகவல்களைக் கூட மறைத்து வருகின்றது. இது மிகப் பெரிய சோகமான நிலையாகும்.

அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப கொரோனாத் தொற்றுநோயைத் தொடர்ந்து பயன்படுத்துவதை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

கொரோனாவின் முதலாம் அலையின் போது அதன் தாக்கம் குறித்து அரசு கவலைப்படாமல் பொதுத்தேர்தலுக்கு வேட்புமனுக்களுக்கு அழைப்பு விடுத்தது. அந்த நேரத்தில் செயற்பாட்டில் இருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலையீட்டால் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுத்திய போதிலும், நாட்டில் ஆபத்து குறித்து எந்தக் கவலையும் இல்லாமல், நிலைமை அமைதியடைவதற்கு முன்னர் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தொற்று நோயின் இரண்டாவது அலை குறித்த அவதானங்களை சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், அதற்குரிய முன்னாயத்தமில்லாத அரசு, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற விரும்பியது.

கொரோனாவின் இரண்டாவது அலையை மறந்து, மூன்றாவது அலையின் எச்சரிக்கைகளுக்குச் செவிசாய்க்காமல், அரசு மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்தது.

உருமாறிய வைரஸ் பரவலுக்குரிய அவதானம் நாட்டுக்குள் உள்ளது எனச் சுகாதார தரப்பு எச்சரித்தபோதும், கொடிய உருமாறிய வைரஸ் பிறழ்வு பரவாமல் தடுப்பதற்கான ஒரு தனிமைப்படுத்தல் மையமாக நம் நாட்டை திறக்கவும் அரசு உக்ரைனியர்களுக்கு அழைப்பு விடுத்தது மாத்திரமல்லாது, இந்த நேரத்தில் இந்தியர்களைத் தனிமைப்படுத்தும் மையமாகவும் மாற்றியுள்ளது. இதன் விளைவுகளையே இன்று அனுபவிக்கின்றோம்.

அரசின் முதன்மைப் பொறுப்பு மக்களின் உயிரைக் காப்பாற்றுவது அல்ல என்பது இதுலிருந்து மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

நாட்டின் இறையாண்மைக்குக் கடுமையான அச்சுறுத்தலாக இருக்கும் போர்ட்சிடட்டி சட்டமூலத்தை நிறைவேற்றுவதை விரைவுபடுத்துவதற்காக இந்த மாதம் 19/20 ஆகிய தினங்களில் அரசு நாடாளுமன்றத்தைக் கூட்டுகின்றது என்பதிலிருந்து இது தெளிவாகின்றது.

கொரோனாத் தடுப்பூசி பெறத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவே அரசு இந்த நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும். மருத்துவமனைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்காகவே சபையைக் கூட்ட வேண்டும். ஆனால், அரசின் முன்னுரிமைகளில் இந்த விடயம் இடம்பெறாமை நாட்டின் துரதிஷ்டமே.

அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அதன் நட்பு வட்டார பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் கொரோனாப் பரவலை அரசு பயன்படுத்துவதை ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டாம் என்று சகல எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் விடுத்த கோரிக்கையை நிராகரித்த அரசின் ஜனநாயக விரோத நடத்தையை நாங்கள் கண்டிக்கின்றோம்.

கொரோனாத் தொற்று நோயின் மூன்றாவது அலை நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கும் தருணத்தில், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களைப் புறக்கணித்து ஒரு சர்வாதிகாரி போல் செயற்படும் அரசின் இந்தச் செயலை ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம் - என்றுள்ளது.

(மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்...)

# திருத்தந்தையரின் மெய்க்காப்பாளர்கள் புதிய சுவிஸ் கார்ட்ஸ் அணி பதவியேற்பு



திருத்தந்தையரின் மெய்க்காப்பாளர்களாகப் பணியாற்றும்சுவிஸ்கார்ட்ஸ் என்ற அமைப்பில் 06 மே 2021 அன்று 34 பேர் புதிதாக இணைந்தனர். சுவிஸ் கார்ட்ஸ் அமைப்பில் வீரர்கள் புதிதாக இணையும் நிகழ்வு இரண்டாவது முறையாக இவ்வாண்டில் பொது மக்களின் பங்கேற்பின்றி இடம்பெற்றது.

1527ஆம் ஆண்டில் உரோம் நகர் சூறையாடப்பட்டபோது திருத்தந்தை 7ஆம் கிளமெண்ட் அவர்கள் பாப்பரசர் மாளிகையைவிட்டுத் தப்பித்துச் செல்வதற்காகப் போராடிய 189 சுவிட்ஸர்லாந்து படைவீரர்களில் 147 பேர் உயிரிழந்தனர். இந்தப் படைவீரர்கள் உயிரிழந்த மே 6 ஆம் நாளன்று ஒவ்வோர் ஆண்டும் வத்திக்கானில் புதிய சுவிஸ் காவல் வீரர்கள் உறுதிமொழி எடுத்து பணியில் சேருவது வழக்கம்.

கத்தோலிக்கத் திருஅவை வரலாற்றில் திருத்தந்தையரைக் காக்கும் பணியில் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் தங்கள் உயிரையும் வழங்கும் அளவு உன்னதமான தியாகங்களை செய்துள்ளனர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுவிஸ் கார்ட்ஸ் என்ற அமைப்பைச் சேர்ந்த மெய்காப்பாளர்களிடம் கூறினார்.

சுவிஸ் கார்ட்ஸ் என்ற அமைப்பு ஓர் இராணுவத்திற்குரிய அம்சங்களைக் கொண்டிருக்கும் அதேவேளையில் அது திருத்தந்தையருக்கும் கத்தோலிக்கத் திருஅவைக்கும் தனிப்பட்ட பணிகளை ஆற்றும் ஒரு சேவை நிறுவனமாகவும் செயல்படுகின்றது என்று திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

# மாரத்தான் செபங்களை மே மாதம் தொடர்வோம்

கொவிட் – 19 பெருந்தொற்று பரவல் இவ்வுலகினின்று முற்றிலும் ஒழியவேண்டும் என்று இந்த மே மாதத்தில் அன்னை மரியாவிடம், செபமாலை பக்திமுயற்சி வழியாக மன்றாடுவோம் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

உலகெங்கும் கொவிட் – 19 பெருந்தொற்று முடிவுக்கு வரவேண்டும் என்ற நோக்கத்திற்காக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விடுத்த அழைப்பின்பேரில், இந்த மே மாதத்தில், உலகின் முப்பது அன்னை மரியா திருத்தலங்களில், மாரத்தான் செபமாலை பக்திமுயற்சி நடைபெற்று வருகிறது.


# ஒளியும், நம்பிக்கையும் நமக்கு தேவை என்கிறார் திருத்தந்தை

*குணப்படுத்தல் மற்றும் மீட்பு ஆகியவற்றுக்கு ஒளியும், நம்பிக்கையும் நமக்குத் தேவைப்படுகின்றன என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இசை நிகழ்ச்சி ஒன்றிற்கு அனுப்பிய ஒளிவலைக் காட்சி செய்தியில் கூறியுள்ளார்.*

*இந்த உலகில் தொடர்ந்து பரவிவரும் பெருந்தொற்று உருவாக்கியுள்ள இருளான மற்றும் நிச்சயமற்ற சூழலுக்கு மத்தியில், நமக்கு ஒளியும், நம்பிக்கையும் தேவைப்படுகின்றமையோடு, குணப்படுத்தல் மற்றும் மீட்புப்பாதைகளும் அவசியமாகின்றன என்று திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.*

# தன்னைச் சுட்டவரை உடனே மன்னித்த திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்

## உலகமே அதிர்ந்துபோன சம்பவத்தின் நாற்பதாவது ஆண்டு இது திருத்தந்தையின் குரலை ஒடுக்க நினைத்தோர் தோல்வியுற்றனர்



மனித உரிமைகளுக்காக – குறிப்பாக அடக்குமுறை ஆட்சியாளர்களின் அடிமைத்தன முயற்சிகளுக்கு எதிராக திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் குரல் எழுப்பியமை பலருக்கு இடைஞ்சலாக இருந்ததன் விளைவாகவே, அவர் மீது கொலை முயற்சி இடம்பெற்றது, என்று கூறினார் போலந்து நாட்டு கர்தினால்.

திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்கள் திருஅவையை வழிநடத்திய 27 ஆண்டு காலம் முழுவதும் அவரின் தனிப்பட்டச் செயலராகப் பணியாற்றிய கர்தினால் அவர்கள் திருத்தந்தை மீது இடம்பெற்ற கொலைமுயற்சியின் 40ஆம் ஆண்டு நினைவையொட்டி அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

20 ஆம் நூற்றாண்டின் அடக்குமுறை ஆட்சிகளின் பாதிப்புக்களை நேரடியாக உணர்ந்திருந்த திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள், தான் திருஅவையை வழிநடத்தத் தொடங்கிய முதல்நாளிலிருந்தே மக்களின் உரிமைகளுக்காகவும் மாண்புக்காகவும் தொடர்ந்து குரலெழுப்பி அதற்கென பெரியதொரு விலையைக் கொடுக்க வேண்டியிருந்தாலும் அவரின் இத்தகைய பணி தடைப்பட்டதேயில்லை என்று தன் பேட்டியில் கூறினார் போலந்து கர்தினால்.

துப்பாக்கிச் சூட்டால் பெரிய அளவில் இரத்தம் வெளியாகி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும் வழியில் சுயநினைவை இழக்கும் முன் தன்னிடம் பேசிய திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்கள் தன்னைச் சுட்டவரை மன்னிததுள்ளார் என அவ்வேளையில் கூறியமையை கர்தினால் நினைவுகூர்ந்தார். இந்தக் கொலை முயற்சிக்குப்பின் திருத்தந்தைக்கு பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்ட போதிலும் மக்களை நேரடி யாக சந்திப்பது, மனித உரிமைகளுக்கு குரல் கொடுப்பது ஆகிய தன் பணிகளில், எவ்வித மாற் றமும் இன்றி திருத்தந்தை தொடந்தார் என்று கூறிய கர்தினால் தன் உயிரை காப்பாற்றியது அன்னை மரியா என்பதில் உறுதியான நம்பிக்கைக் கொண்டிருந்த திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் தன்னை சுட்ட முகமது அலி அக் காவை சிறையில் சந்தித்தமையையும், அவருக்கு மன் னிப்பு அளித்து விட்டமையை அவரிடம் அப் போது நேரில் தெரிவித்தமையையும் எடுத்துரைத்தார்.

1981ஆம் ஆண்டு, பாத்திமா அன்னை மரியா திருவிழாவான மே மாதம் 13ஆம் திகதியன்று, திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் கொலை முயற்சியிலிருந்து தப்பியமை மட்டுமல்ல அவரின் குரலை முடக்க நினைத்தவர்களின் எதிர்பார்ப்பை பொய்யாக்கி நான்கே நாள்களில் அதாவது – மே 17ஆம் திகதி – வத்திக்கான் வானொலி வழியாக வானக அரசியே வாழ்த்தொலி உரையையும் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனக்காக செபித்தவர்களுக்கு நன்றி கூறுகின்றார் எனவும், இந்தத் துப்பாக்கிச் சூட்டின்போது தன்னுடன் காயமடைந்த இருவருடன் தான் நெருக்கமாக இருக்கிறார் எனவும், தன்னை சுட்டவருக்காகச் செபித்தார் எனவும், அவரை மன்னித்துள்ளார் எனவும், தன் வேதனைகளை திருஅவை மற்றும் உலகின் நலனுக்காக ஒப்படைக்கிறார் எனவும் தன் வானக அரசியே வாழ்த்தொலி உரையில் தெரிவித்தார் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல்.

தன் மீதான கொலைமுயற்சி இடம்பெற்ற அடுத்த ஆண்டே திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்கள் பாத்திமா திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொண்டமை மற்றும் தன்னைத் துளைத்த குண்டை பாத்திமா அன்னை திருத்தலத்திற்கு காணிக்கையாக வழங்கியமை ஆகியவை இங்கு நினைவுகூரத்தக்கவை.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# பெருந்தொற்று காலத்தில் திருஅவையின் வாழ்வு பற்றி கர்தினால்கள் கூடி ஆராய்வு

உலகெங்கும் கொவிட் – 19 பெருந் தொற்று உருவாக்கியுள்ள நெருக் கடிகள் மற்றும் அவற்றுக்கு திரு அவையின் பதிலுறுப்பு ஆகியவை பற்றி சீ – 9 கர்தினால்கள் அவை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களு டன் இணைந்து கலந்தாலோசித்தது என திருப்பீடத் தகவல் தொடர்பகம் அறிவித்துள்ளது.

திருப்பீடத் தலைமையகத்தின் சீர் திருத்தப் பணிகளில் திருத்தந்தைக்கு ஆலோசனை வழங்கும் சீ – 9 கர்தினால்கள் அவை திருத்தந்தையின் பங்கேற்புடன் மே 06 அன்று இணை யம்வழி நடத்திய கூட்டத்தில் கொவிட் – 19 பெருந்தொற்று, பொருளாதார மற்றும் சமுதாய அளவில் உருவாக்கியுள்ள எதிர்விளைவுகள் குறித்த தங்களின் அனுபவங்களை கர்தினால்கள் பகிர்ந்துகொண்டனர் என்றும் மக்களின் நலத்தையும் பொருளாதாரச் சரிவையும் மீட்டெடுப்பதற்கும் அதிகத் தேவையில் இருப்போருக்கு ஆதரவு வழங்குவதற்கும் திருஅவையின் அர்ப்பணம் குறித்து கலந்துரையாடினர் என்றும் கூறப்பட்டுள்ளது.

# பெருந்தொற்றுக் காலத்தில் நற்பணிகளைப் புரியுங்கள்!

## வத்திக்கான் அறிவுரை

கவலையின்றி இருங்கள், அச்சம் தவிருங்கள், பதற்றமின்றி இருங்கள், கைவிட்டுப் போனவற்றுக்காக வருந்தாதிருங்கள், கோபத்தை வென்றிடுங்கள், அன்புகூருங்கள், நேர்மறை எண்ணத்துடன் இருங்கள், கடவுள் காப்பார் என்று நம்பியிருங்கள், துணிவோடு இருங்கள், கொரோனா குறித்து வீண் பயத்தைத் தவிர்த்து பாதுகாப்பாக இருங்கள் என்று வத்திக்கான் அறிவுரை வழங்கியுள்ளது.

அச்சம் என்பது, எந்தவொரு மாற்றத்திற்கும், எதிர்வினையாக அமைவதாகும். நாம் அச்சத்தினால்தான் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கிறோம். ஆனால் அது நமது வாழ்க்கையைக் கட்டுப்படுத்த அனுமதித்தால் நம்மால் எந்தவொரு ஆக்கப்பூர்வமான செயலையும் செய்ய முடியாது. நாம் தேவையற்ற, எதிர்மறையான தகவல்களை மனதுக்குள் கிரகிப்பதால், மனச்சோர்வு, மனபயம், தூக்கமின்மை போன்றவை ஏற்படுகின்றன.

எனவே நாள் முழுவதும் கொரோனா சம்பந்தப்பட்ட செய்திகளைப் பார்த்துப் பதற்றப்படுவதை விடுத்து தினமும் அரை மணி நேரம் ஒதுக்கி தேவையான செய்திகளை மட்டும் பாருங்கள். தொலைபேசி மற்றும் தொலைக்காட்சியில் அதிக நேரம் செலவிடுவதைத் தவிருங்கள். போதுமான நேரம் தூங்குங்கள். தினமும் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மற்றும் மூச்சுப்பயிற்சி ஆகியவற்றை மேற்கொள்ளுங்கள்.

சத்தான உணவுகளையும், காய்கறி, பழங்களை உண்ணுங்கள், அதேநேரம் புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பழக்கத்தைத் தவிர்த்து வாழுங்கள். மனதுக்கு பிடித்த ஏதாவது ஒரு பொழுதுபோக்கிலும் மனதுக்கு ஊக்கமளிக்கும் செயல்களிலும் ஈடுபடுங்கள். நம்முடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் பற்றி கவலைப்படுவதைக் காட்டிலும், கட்டுப்படுத்தக்கூடிய விடயங்கள் பற்றி ஏதாவது செய்யுங்கள்.

கடந்த காலம், மற்றும், எதிர்காலத்தை பற்றி சிந்திப்பதைத் தவிர்த்து, நிகழ்காலத்தில் கவனம் செலுத்துங்கள். மனம் அலைபாயாமல் இருப்பதற்கு ஏதாவது ஓர் இலக்கை நிர்ணயித்து அதற்கான முயற்சியை செய்து வெற்றி காண முயற்சியுங்கள். தற்போது கிடைத்துள்ள நேரத்தில் சுய பரிசோதனை செய்து தவறான எண்ணங்கள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை தவிர்த்து நல்ல பழக்க வழக்கங்களை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.




– இவ்வாறு வத்திக்கான் மேலும் அறிவுரை வழங்கியுள்ளது

# எந்த வேளையிலும் மனம் தளராதே!

மடத்தில் ஜென் துறவி ஒருவர் சீடர்களுக்கு பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அவர் சீடர்களுக்குத் துன்பம் வந்தால் தன்னம்பிக்கையுடன் மனதைத் தளராமல் இருக்க வேண்டும் என்ற புத்தியை அவர்களுக்கு புகட்டுவதற்கு ஒரு சிறு கதை சொல்லி புரிய வைக்க நினைத்தார். அதனால் அவர் ஒரு எறும்பு கதையை தன் சீடர்களுக்கு சொன்னார்.

அதாவது ஓர் எறும்பு தன் வாயில் சற்று நீளமான உணவுப் பொருளைத் தூக்கிச் சென்றது. அப்போது அது செல்லும் வழியில் ஒரு விரிசல் தென்பட்டது. அதனால் அந்த எறும்பு அதை தாண்டிச் செல்ல முடியாமல் தவித்தது. சற்று நேரம் கழித்து, அந்த எறும்பு தன் உணவை அந்த விரிசல் மீது வைத்து, அதன் மீது ஊர்ந்து சென்று விரிசலைக் கடந்து, பின் தன் உணவை எடுத்துச் சென்றது என்று கூறினார்.

பின் அவர்களிடம், அதேபோல் தான் நாமும் நமக்கு ஏற்படும் துன்பத்தையும் பாலமாக வைத்து, முன்னேற வேண்டும் என்று கூறினார். அந்தச் சிறு எறும்பின் தன்னம்பிக்கை நமக்கு இருந்தாலே நாம் வாழ்வில் எந்தத் தடையையும் எளிதாக கடந்து செல்ல முடியும், துன்பமும் காணாமல் போய்விடும் என்று கூறி, அன்றைய பாடத்தை முடித்தார்.



தொகுப்பு - ப்ரியமதா பயஸ் -



# வாழ்க்கையில் வேகமா முன்னேற வழி

ஒரு மனிதனை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்வது அவனுடைய எண்ணம் தான் ‘எண்ணம் போல் வாழ்க்கை’. ‘நாம் எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுவடை செய்ய முடியும்’. உங்கள் வாழ்க்கையை உயரத்திற்கு நீங்களே கொண்டு செல்ல வேண்டும் என்றால், அது உங்கள் எண்ணத்தில் தான் உள்ளது.

எக்காரணத்தைக் கொண்டும் உங்கள் மனதையும், எண்ணத்தையும் சிதறவிடாமல் ஒருநிலைப்படுத்தி நல்ல முறையில் வழி நடத்தினால் மட்டுமே வாழ்க்கையில் வெற்றி இலக்கை அடைய முடியும்.

இதில் சொல்லப்படும் குறிப்புகள் எல்லோரும் அறிந்ததாக இருந்தாலும், அதை நீங்கள் மறுபரிசீலனை செய்து உங்கள் வாழ்க்கையில் நடைமுறைக்கு கொண்டு வாருங்கள்.

படித்ததோடு விட்டுவிட்டால் அதன் பலன் நமக்கு தெரியாது. நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தி பார்க்கும் போதுதான் அதன் பலன் தெரியும்.

வாழ்க்கையில் கொஞ்சம் கஷ்டப்பட்டு முன்னேறியவர்களாக இருந்தால், அவர்கள் கஞ்சத்தனம் கொண்டவர்களாக மாறிவிடுவார்கள். நமக்கு கிடைக்காத ஒரு பொருள் நமக்கு கிடைத்திருக்கிறது. அதை யாருக்கும் கொடுக்கக்கூடாது. நம்மிடமே வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சிலர் நினைப்பது உண்டு.

அதுதான் பணம். உங்கள் கையில் வரும் பணத்தை கொஞ்சம் இல்லாதவர்களுக்கும் கொடுக்கும் பழக்கம் உங்களுக்கு வரவேண்டும். இல்லை, இல்லை என்று சொல்வதை நிறுத்திவிட்டு, இல்லாதவர்களுக்கு கொடுக்கும் அளவிற்கு நம் கையில் பணம் உள்ளது என்பதை நினைத்து கடவுளுக்கு நன்றி சொல்லி இல்லாதவர்களுக்கு, கொடுப்பதை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள்.

வாழ்க்கையின் எந்த சூழ்நிலையிலும், ‘நம் ஆசை நிறைவேறிவிட்டது’ என்று அப்படியே உட்கார்ந்து விடக்கூடாது. எப்படியாவது இருக்கும் நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு உயர்ந்து விட வேண்டும் என்ற எண்ணம் நம் மனதிற்குள் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்.

வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு ஓடிக்கொண்டே இருங்கள். உங்கள் வாழ்க்கையை தொலைத்துவிட்டு ஓடக்கூடாது.

வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு ஓடுங்கள். காசு மட்டும் தான் வாழ்க்கையா? என்ற கேள்வியை உங்கள் மனதிற்குள் கேட்டுக் கொண்டு ஓடுங்கள்.

விடயம் இருக்கிறது. நாளைக்கு தேவையான பணம் உங்கள் கைகளில் இருந்தால், நீங்கள் மன அழுத்தம் இல்லாமல், உங்களுடைய எண்ணங்களை எந்த வித சேதாரமும் இல்லாமல் செயல்படுத்த முடியும். கையில் காசு இல்லை என்றால், எண்ணங்கள் சிதறும், மன அமைதி கிடைக்காது. பயம் ஏற்படும். நடுக்கம் ஏற்படும். செய்யும் வேலையில் தடுமாற்றம் உண்டாகிவிட்டால் தோல்விதான்.

(அடுத்த நாள் செய்ய வேண்டிய வேலையில் பாதியை, இன்றே கொஞ்சம் கஷ்டப்பட்டு செய்து வைத்து விட்டோம் என்றால், அடுத்த நாள் செய்யும் வேலை நமக்கு இன்னும் சுலபமாகி, அன்று நம்முடைய வேலை செய்யும் திறனானது இரண்டு மடங்கு அதிகரிக்கும்.

இதை சோதித்துப் பாருங்கள். புரிகிறதா? நாளைக்கான வேலையை இன்றே செய்து வைத்தால், அடுத்த நாளைக்கான வேலை செய்யும் ஆற்றல் அதிகரிக்கும். நாளைக்குத் தேவையான பணத்தை இன்றே கையில் வைத்துக்கொண்டால், அடுத்தநாள் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆற்றல் தானாகவே அதிகரித்துவிடும்.).

நம் மனதை மாற்றும் எத்தனையோ வகையான நல்ல புத்தகங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு புத்தகத்தை படிக்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டால் நம் மனது இப்போது பூத்த பூ போல அழகாக இருக்கும். தனியாக அமர்ந்து இருக்கும் போது நம்முடைய வாழ்க்கையை பின்னோக்கி யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு வருடத்திற்கு முன்பு நாம் எப்படி இருந்தோம்? இரண்டு வருடத்திற்கு முன்பு நாம் எப்படி இருந்தோம்? இப்போது இவ்வளவு முன்னேறி இருப்பதற்கு என்ன காரணம்? உங்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள்.

வெற்றிக்கான பதில் வெளி நபரிடம் இல்லை. உங்களிடம் தான் உள்ளது. ‘நீ என்னவாக நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிவிடுவாய்’ இது விவேகானந்தரின் கூற்று.

வீட்டில் அடிக்கடி பார்க்கும் இடத்தில், சுவரில் இதை ஒட்டி வைத்து பார்த்துக்கொண்டே இருங்கள். முடிந்தால் கண்ணாடியில் கூட ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். கண்ணாடியை அடிக்கடி பார்ப்போம் அல்லவா?

உங்களுடைய Mind set தான் உங்கள் வாழ்க்கையை மேலே எடுத்துச் செல்லும். கீழேயும் தள்ளிவிடும். ஆகவே, உங்களது மூளையை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளுங்கள். நேர்மறையாக வைத்துக்கொள்ளுங்கள். எண்ணங்கள் நல்லதாக, புதியதாக தோன்றிக்கொண்டே இருக்க வேண்டுமே தவிர, குறுக்கு வழியையும், கெட்ட வழியையும் என்றும் சிந்திக்க கூடாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வியங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை தான். ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றினால் கூட உங்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் இருந்து கொண்டே இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

# உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள்!!!!!

இன்றைய காலத்தில் நிறைய மக்கள் சோம்பேறித்தனத்துடன், கவனக்குறைவோடு, எதைப் பற்றியும் கவலை இல்லாமல் இருக்கின்றனர்.

ஏனெனில் அவர்களுக்கு எந்த ஒரு நினைப்பும் இல்லை. இதனால் அவர்கள் எந்த ஒரு பெரிய பாராட்டையும் பெறப் போவதில்லை.

ஆனால் தோல்வியடைந்து விட்டால் மட்டும், அதை நினைத்து மனதை தளரவிட்டு, வாழ்க்கையை வீணாக்குவார்கள் .

ஆகவே அவ்வாறு இல்லாமல், மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைப்பதோடு, அடைய வேண்டிய இலக்கை மனத்தில் கொண்டு சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும்.

எந்த நேரத்திலும் நீங்களே முடிவெடுங்கள். இது வரை சிறுவயதில் உங்களுக்கு உங்கள் வீட்டில் இருக்கும் பெற்றோர்கள் முடிவெடுப்பார்கள்.

இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். இந்த நேரம் தான் நீங்கள் சுயமாக உங்கள் முடிவுகளை எடுக்க வேண்டிய தருணம்.

எப்போதும் எதையும் செய்ய முடியவில்லை என்று மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்காமல், பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், நினைத்தால் மட்டும் போதாது, சுயமாக முடிவு எடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.



எப்போதும் மற்றவர்கள் கூறுவதை கேட்காமல், உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உள்ளம் என்ன சொல்கிறதோ, அதை செய்யுங்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பதால், வெற்றியை அடைய முடியாது.

ஆகவே உங்கள் மனம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு, அதன் படி நடக்க வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு ஏதேனும் ஒரு புதிய வியங்களைச் செய்யும் போது, மற்றவர்கள் முடியாது என்று நினைப்பதை கூட, நீங்கள் முழு கவனத்தோடு, செய்து முடிப்பீர்கள்.

# பாதுகாப்பற்ற வகையில் ரயில் சேவையில் ஈடுபட முடியாது ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கச் செயலாளர் எச்சரிக்கை

ரயில் சேவையாளர்களுக்கு கொவிட் வைரஸ் தடுப்பூசிகளை வழங்கும் வரை ரயில் சேவையைப் புறக்கணிக்க தீர்மானித்துள்ளோம். ரயில் சேவையாளர்களுக்கு 6 ஆயிரம் தடுப்பூசிகளை வழங்குவதாக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. பாதுகாப்பற்ற வகையில் ரயில் சேவையில் ஈடுபடத் தயாரில்லை என ரயில் கட்டுப்பாட்டா ளர் சங்கத்தின் செயலாளர் மனு பீறிஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் ரயில் சேவையாளர்கள் பாதுகாப்பற்ற வகையில் ரயில் சேவையில் ஈடுப்பட்டார்கள்.

ரயில் சேவையாளர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ரயில் திணைக்களத்துக்கும், போக்குவரத்து அமைச்சுக்கும் பல முறை கோரிக்கை விடுத்தோம். முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரையில் முன்னெடுக்கவில்லை.

ரயில் சேவையாளர்களுக்கு 6 ஆயிரம் கொவிட் வைரஸ் தடுப்பூசிகளை வழங்குவதாக பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். இவரது கருத்து பேச்சளவில் மாத்திரமே காணப்படுகிறது.

புதுவருட கொவிட் கொத்தணி வைரஸ் தாக்கம் கடந்த காலத்தை காட்டிலும் தற்போது தீவிரமாக பரவலடைந்துள்ளது. கொவிட் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பயணத்தடை விதிக்கப்பட்டது. இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் பொதுப்போக்குவரத்துச் சேவைகளை மீள ஆரம்பிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரயில் சேவையாளர்களுக்கு கொவிட் வைரஸ் தடுப்பூசிகளை வழங்கும் வரை ரயில் சேவையில் ஈடுபடாமல் இருக்கத் தீர்மானித்துள்ளோம். இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் உறுதியான பதிலை வழங்க வேண்டும்.

மேலும், ரயில் சேவையில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். ஆகவே, பாதுகாப்பற்ற முறையில் ரயில் சேவையில் ஈடுபடத் தயாரில்லை. - என்றார்.

# இலங்கையில் மேலும் 42 பகுதிகள் திங்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளன

கொழும்பு, மே 16

நாட்டில் நாளை திங்கட்கிழமை முதல் 31ஆம் திகதி வரையான இரண்டு வார காலத்திற்கு தனிமைப்படுத்தலுக்கான நடைமுறைகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை திங்கட்கிழமை முதல் 3 மாவட்டங்களைச் சேர்ந்த 42 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

நாட்டில் 15 மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரையான பயணத்தடை எதிர்வரும் மே 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

Agriculture Information

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## இலங்கை மத்திய வங்கியினது 2020 ஆண்டு அறிக்கை நெற்செய்கை பற்றி என்ன சொல்கிறது



இலங்கைப் பொருளாதாரம் கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக முன்னொருபோதுமில்லாத விதத்தில் சமூகப் பொருளாதார ரீதியில் சரிவை எதிர்கொண்டது. வேளாண்மை நடவடிக்கைகளும் வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு நோய்த்தொற்றுடன் தொடர்பான குழப்பநிலைமைகள் ஓரளவு காரணமாக இருந்த போதும் முடக்க காலப்பகுதியிலும் கூட வேளாண்மை நடவடிக்கைகள் தொடர்வதற்கு தூண்டுதலளிக்கும் சூழல்கள் ஆதரவாக அமைந்தன. 2020இல் நெல் உற்பத்தி முன்னொருபோதுமில்லாத மட்டத்திற்கு அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக சாதகமான வானிலைநிலைமையை குறிப்பிட முடியும் அத்துடன் அரசாங்கத்தின் தூண்டுதலளிக்கும் கொள்கைகள் சார்ந்த செயற்றிட்ட ஆதரவும் காரணங்களாக அமைந்திருந்தன. 2019இல் அபரிமிதமான நெல் உற்பத்தி அறுவடை பதிவுசெய்யப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக 2020 நெல் உற்பத்தி 11.5 சதவீதத்தினால் மேலும் அதிகரித்தது இது முன்னைய ஆண்டினை விட 5.1 மில்லியன் மெ.தொன்கள் அதிகமாகும். மொத்த ஆண்டு உற்பத்தியில் 2019/20 பெரும்போகமானது 4.0 சதவீதத்தினால் அதிகரித்து நாட்டின் உற்பத்தியில் ஏறத்தாழ 62 சதவீதத்திற்கு வகைகூறியது அதே வேளையில் 2020 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 26.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

2019 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் நாடு முழுவதுமாக விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 7,48,000 ஹெக்டேயர்கள் ஆகும் அதேபோல் 2019 சிறுபோகத்தில் நாடு முழுவதுமாக விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 3,69,000 ஹெக்டேயர்கள் ஆகும். மொத்தமாக பார்த்தால் 2019 ஆம் ஆண்டில் நெல் செய்கை பண்ணப்பட்ட மொத்த நிலப்பரப்பு 11,17,000 ஹெக்டேயர்கள் ஆகும் இவற்றின் மொத்த விளைச்சல் உற்பத்தி 45,92,000 மெற்றிக் தொன்களாகும்

2020 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் நாடு முழுவதுமாக விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 7,52,000 ஹெக்டேயர்கள் ஆகும் அதேபோல் 2019 சிறுபோகத்தில் நாடு முழுவதுமாக விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 4,56,000 ஹெக்டேயர்கள் ஆகும். மொத்தமாக பார்த்தால் 2020 ஆம் ஆண்டில் நெல் செய்கை பண்ணப்பட்ட மொத்த நிலப்பரப்பு 12,08,000 ஹெக்டேயர்கள் ஆகும் இவற்றின் மொத்த விளைச்சல் உற்பத்தி 51,21,000 மெற்றிக் தொன்களாகும்.

2019 இல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு 35,000 மெற்றிக் தொன்களாக ஆக இருந்தது இது 2020 இல் 16,000 மெற்றிக் தொன்களாக வீழ்ச்சியடைந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு சமனான நெல்லானது 2019 இல் 35,000 மெற்றிக் தொன்களாக ஆக இருந்தது இது 2020 இல் 23,000 மெற்றிக் தொன்களாக வீழ்ச்சியடைந்தது.

2020இன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் ஏற்படுவதற்கு அரசாங்கத்தின் தலையீடுகளாகிய உத்தரவாத நெல் கொள்வனவு மற்றும் நெற் செய்கைக்கான இலவச இரசாயன உரங்களினது வழங்கல் போன்றன பங்களிப்புச் செய்தன.

மேலும் இவ் அரசாங்கத் தலையீடுகள் நெல் விவசாய சமூகத்தின் குடும்ப வருமான மட்டங்களை அதிகரித்ததுடன் அதனால் அவர்களின் வாழ்க்கைத் தரங்களையும் மேம்படுத்தியது. 2020இல் செய்கைபண்ணப்பட்ட வருடாந்த நெல் உற்பத்தியானது நாட்டு மக்களது வீட்டுத்தேவைக்கான அரிசியின் கேள்வியில் ஏறத்தாழ 17 மாத கேள்வியைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருந்தது.

2019இலும் அதேபோன்று 2020இலும் உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 இல் திறந்த சந்தையில் நெல் விலைகள் உயர்வடைந்து காணப்பட்டன.

நாட்டின் சராசரி திறந்த சந்தை நெல் விலை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020இல் கி.கிறாமிற்கு ரூ.47.73 இற்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சம்பா நெல்லின் சராசரி திறந்த சந்தை விலையும் கி.கிறாமிற்கு ரூ.50.56 இற்கு 18.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட நெல் கொள்வனவு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கு மேலே நெல் இருப்பினைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் ஆலைச் சந்தக்காரர்களிடையே நிலவிய போட்டியும் நெல் விலைகளில் அதிகரிப்பு ஏற்படப் பங்களித்தன. சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளுக்கான (உலர்) கி.கிறாம்அரிசிக்கான உறுதிப்படுத்தப்பட்ட நெல் கொள்வனவு விலைகள் பற்றி தற்போது பார்ப்போம்

2019 இல் ரூ.41.00 இருந்து விலையானது 2020இல் ரூ.50.00 இற்கு அதிகரித்தது. நாட்டரிசிக்கான (உலர்) விலைகள் 2019இல் ரூ.38.00 இருந்து 2020 இல் ரூ.50.00 இற்கு அதிகரித்தது. அதேவேளை உயர்ந்த ஈரலிப்புத்தன்மையினைக் கொண்ட நெல்லிற்கான உறுதிப்படுத்தப்பட்ட விலை கி.கிறாமிற்கு ரூ.44.00 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

ஒரு சில ஆலை உரிமையாளர்கள் உயர்ந்த சந்தை சக்தியைக் கொண்டிருந்தமையின் காரணமாக அரிசியின் சில்லறை விலைகள் அரசினால் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை விட உயர்வாகக் காணப்பட்டன. சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலை 2019இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.102.29 ஆக இருந்தது அதே வேளை 2020இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.104.37 இற்கு அதிகரித்தது

அதேவேளை நாட்டு அரிசியின் சராசரி சில்லறை விலை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ரூ.93.48 உடன் ஒப்பிடுகையில் 2020இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.100.01 ஆக அதிகரித்தது. மேலும், 2020இல் அரிசி இறக்குமதிகள் 15,770 மெ.தொன்களுக்கு வீழ்ச்சியடைந்து

முன்னைய ஆண்டினைவிட 34.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு உயர்ந்த உற்பத்தியும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுவழிமுறைகளும் காரணங்களாக அமைந்தன

இலங்கை மத்திய வங்கியினது தொகுப்பானது தமிழ், ஆங்கிலம், சிங்களம் என மூன்று மொழிகளிலும் கிடைக்கும்.

பலருக்கும் புரியும்படி இலகு தமிழில் இந்த தொகுப்பானது மீள அமைக்கப்பட்டுள்ளது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# அரசின் செயற்பாட்டால் மக்கள் கடும் பாதிப்பு

## ரஞ்சித் மத்தும பண்டார காட்டம்



கொழும்பு, மே 16

கொவிட் தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தின் திட்டமிடப்படாத செயற்பாட்டால் நாட்டு மக்கள் கடுமையான சவால்களை எதிர்கொள்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார இதனைத் தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப்பற்றாக்குறையால் தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் தற்போது பல கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

அந்தப் பகுதிகளில் வாழ்பவர்கள் தற்போது அவர்களின் வருமான ஆதாரங்களை இழக்க நேரிட்டுள்ளது. எவ்வாறாயினும், உழைக்கும் மக்களுக்கு ஆரோக்கியமான போக்குவரத்து வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது.

இந்நிலையில், தற்போதைய நிலைமையை உணர்ந்து மக்கள் சார்பாக உடனடியாக எடுக்கப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை ரஞ்சித் மத்தும பண்டார பரிந்துரைத்துள்ளார்.

மேலும், சுகாதார வழிகாட்டுதல்களின்படி மக்களின் உயிரைக் காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். - என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஆறு வகையான கொரோனா திரிவுகள் நாட்டில் உள்ளன

நாட்டில் ஆறு வகையான கொவிட் திரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனத் தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆறு வகையிலான கொவிட் நுண்மித் தொற்று திரிவுகளால் பாதிக்கப்பட்டோர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்க திரிவுடைய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் இந்திய திரிபால் பாதிக்கப்பட்ட ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பு, குருணாகல், களுத்துறை, கண்டி, பொலனறுவை, மன்னார் போன்ற நகரங்களில் இந்த புதிய திரிவுடைய தொற்று உறுதியானவர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்புதனிமைப்படுத்தல் மையமொன்றில் இந்திய திரிவுடைய கொவிட் தொற்றாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனஅந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# 728 பி.சி.ஆர். முடிவுகளுக்காக சுகாதாரத்துறை காத்திருப்பு

## மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

மன்னார், மே 16

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 390 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலும் 728 பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளன என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 390 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் ஜனவரி தொடக்கம் தற்போது வரை 373 கொவிட் தொற்றாளர்களும், மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் தற்போது வரை 31தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இது வரை 3 கொவிட் மரணங்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் இந்த மாதம் 1,288 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 728 பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளன.

மேலும் காய்ச்சலுடன் மூச்சு விடுவதில் சிரமம் அல்லது சுவாச குணங்குறிகளுடன் மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையை நாடுமாறும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 8 கொரோனாத் தொற்றாளர்கள் வவுனியாவில் அடையாளம்

வவுனியா, மே 16

வவுனியாவில் 8 பேர் கொவிட் தொற்றுக்கு இலக்காகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்ற முடிவுகளுக்கு அமைய இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியாவை சேர்ந்த பலரது பி.சி.ஆர். பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் முடிவுகளின் பிரகாரம் வவுனியா வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக சேர்க்கப்பட்ட இருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தலில் இருந்த 6 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசின் தேவை முடியும் வரை நாடு முடக்கப்பட மாட்டாது

## ஹர்ஷன ராஜகருணா தெரிவிப்பு

கொழும்பு, மே 16

அரசாங்கத்தின் தேவை காரணமாக, அரசாங்கம் நாட்டை முடக்கப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

துறைமுக நகரத் திட்டம் தொடர்பான யோசனையை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருக்கின்றது. இதன் காரணமாக அரசாங்கம் நாட்டை முடக்கப்போவதில்லை என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதும் நாட்டை முடக்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் கூறினார்.

இதேவேளை, சினோபோர்ம் தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்திருந்தார்.

எனினும், இது தொடர்பான உத்தரவு இன்னும் எழுத்துபூர்வமாக வெளியிடப் படவில்லை என்று ஹர்ஷன ராஜகருணா மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல் விடுத்தார் சட்டமா அதிபர் தப்புல்ல

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஏ பிரிவில் உள்ள 42 சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சியங்களை உறுதிப்படுத்துமாறு சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# அம்பாறை நிந்தவூரில் தீ விபத்து பல லட்சம் ரூபா பொருள்கள் நாசம்



நிந்தவூர் பிரதேசத்தில் தீயணைப்பு படையினரின் உடனடி நடவடிக்கை காரணமாக இடம்பெறவிருந்த பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நிந்தவூர் பிரதேச செயலகம், சபை எல்லைக்கு உட்பட்ட கட்டப்பொருள்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் மற்றும் அதன் அருகில் இருந்த மரத்தளபாட வேலைத்தளம் ஆகியன கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.50 மணியளவில் தீக்கிரையாகி எரிந்து நாசமாகியுள்ளன.

இதன்போது. கல்முனை மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பை ஏற்று சுமார் 8 நிமிடங்களுள் விரைந்து வந்த கல்முனை மாநகர தீயணைப்புப் படை வீரர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு விரைந்த சம்மாந்துறைப் பொலிஸார் மற்றும் படையினர் நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் ஆஷ்ரப் தாஹீர் உட்பட உறுப்பினர் அஸ்பர் ஆகியோர் தேவையான அனைத்து வகையான முன்னெடுப்புக்களையும் செய்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வர்த்தகர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் தான் இந்த வர்த்தக நிலையத்தை திறந்தார் எனவும் 35 லட்சம் ரூபா மதிப்புள்ள பொருள்கள் எரிந்துள்ளன எனவும் தெரிவித்தமையுடன் விரைந்து செயற்பட்ட கல்முனை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவிற்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

# மாயைகளின் பின்னால் அரசு சென்றமையே பொது மக்களின் அவலத்துக்குக் காரணம்

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



அரசாங்கம்மாயைகளின் பின்னால் சென்றமையே இலங்கையின் இன்றைய நிலைக்குக் காரணம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் குற்றம் சுமத்தியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றின் மூன்றாவது அலைக்கு முகங்கொடுப்பதற்கு அரசாங்கம் எடுத்த தவறான நடவடிக்கைகளின் விளைவினை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

வைரஸ் தொற்றை எதிர்கொள்ள தடுப்பூசி செலுத்தும் திட்டத்திற்கு தயாராகாமல் பல்வேறு பானிகளை அருந்துதல் பல மாயைகளை பின்பற்றுதல் போன்றவற்றை அரசாங்கம் ஊக்குவித்தமையே இன்றைய நிலைக்குக் காரணம் எனவும் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 217 பேருக்கு கொரோனாத் தொற்று

கொக்கலை முதலீட்டு மேம்பாட்டு வலயத்தில் அமைந்துள்ள 5 ஆடைத் தொழிற்சாலைகளில் பணி புரியும் 1,500 இற்கும் அதிகமான ஊழியர்களுக்கு கடந்த தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வெளியாகி உள்ள முடிவுகளுக்கு அமைய 217 ஊழியர்களுக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

சிகிச்சை மத்திய நிலையங்களில் காணப்படும் நெருக்கடி காரணமாக குறித்த தொற்றாளர்கள் அவர்களின் வீட்டிலேயே தங்கியுள்ளனர் என ஹபராதுவை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# தமிழர்கள் மரணித்த தமது உறவுகளை நினைவுகூரவே போராட வேண்டியுள்ளது

## சுரேஷ் பிறேமச்சந்திரன் வேதனை



இறுதி யுத்தத்தில் குவியல் குவியலாகத் தமது உறவுகளை இழந்த மக்கள் அவர்களை நினைவுகூர்வதற்கான உரிமையைக்கூட மதிக்காமல் உயிரிழந்த மக்களுக்காக வைக்கப்பட்டிருந்த சிறிய நினைவுத்தூபியையும் சிறிலங்கா அரச இயந்திரம் இடித்தழித்துள்ளது என்று குற்றம் சுமத்தியுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ்பிறேமச்சந்திரன் இழந்தவர்களை நினைவு கூர்வதற்கே தமிழர்கள் போராட வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்ததைக் கண்டித்தும் நினைவேந்தல் நிகழ்விற்கு தடையுத்தரவு பெறப்பட்டிருப்பதையும் கண்டித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:

நடந்து முடிந்த ஈழவிடுதலைப் போராட்டத்தில் லட்சக்கணக்கான பொதுமக்களை நாங்கள் இழந்திருக்கிறோம். அதேபோல் இறுதி யுத்தத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். அந்த பொதுமக்களின் நினைவுகளை மீட்டிக்கொள்வதும் அவர்களை கௌரவப்படுத்துவதும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். சர்வதேச சட்டவாயங்களின் அடிப்படையில் இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு வருடமும் பொது மக்களை நினைவுகூர்வதாக இருந்தாலும் சரி, போராளிகளை நினைவுகூர்வதாக இருந்தாலும்சரி பலத்த போராட்டத்தின் மத்தியிலேயே இத்தகைய நினைவுகூர்தலை நாங்கள் செய்ய வேண்டியிருக்கின்றது.

கொரோனா என்பது ஒருபக்கம் இருக்க, ஊர்வலங்களாக இருந்தாலும்சரி, உண்ணாவிரதங்களாக இருந்தாலும்சரி ஜனநாயக நெறிமுறைகளுக்கு உட்பட்டு சிறிய பெரிய போராட்டங்களை முன்னெடுப்பதாக இருந்தாலும் சரி உடனடியாகவே பொலிஸார் நீதிமன்றங்களை அணுகி தடையுத்தரவைப் பெறுகின்றமை என்பது வாடிக்கையாகிவிட்டது.

இதேநிலைமைதான் முள்ளிவாய்க்காலில் மரணித்துப்போன எமது மக்களை நினைவுகூர்வதற்கெதிராகவும் நீதிமன்றத் தடையுத்தரவுகளையும் பொலிஸார் பெற்றுள்ளனர். அதுமாத்திரமல்லாமல், இறந்த மக்களை நினைவுகூரும் முகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு சிறிய நினைவுச்சின்னம்கூட அரச இயந்திரத்தால் உடைத்தெறியப்பட்டிருக்கின்றது. இராணுவம் பொலிஸ் உட்பட்ட அரச இயந்திரம் மக்களின் உணர்வுகளைப் சிதைப்பதென்பது கண்டிக்கத்தக்கதும் அநாகரிகமானதுமாகும்.

அரசாங்கத்தின் மனித உரிமைக்கெதிரான செயற்பாடுகளை கனேடிய தூதுவர் கண்டித்திருப்பதை நாங்கள் வரவேற்பதுடன், ஏனைய நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டிக்க முன்வரவேண்டும் என்பதுடன் நினைவுகூரல் நிகழ்வுகள் எவ்விதமான அரச தலையீடுகளுமின்றி நடைபெறுவதற்கு சிறிலங்கா அரசாங்கத்துக்குத் தமது அழுத்தங்களை உயர்மட்ட அளவில் பிரயோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

தென்பகுதியில் அரசுக்கெதிராகப் போராடிய பொது மக்களும் போராளிகளும் சிங்கள மக்களால் நினைவுகூரப்படுகிறார்கள், கொண்டாடப்படுகிறார்கள். அதற்கு எத்தகைய தடை உத்தரவுகளும் கிடையாது. வடக்கு – கிழக்கில் புதிய புதிய பௌத்த ஆலயங்கள் உருவாக்கப்படுகிறது. அதற்காக நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் ஒன்றுகூடி இராணுவம் மற்றும் பொலஸாரின் பாதுகாப்புடன் பிரித் ஓதுதலும் இரவு பகலாக நடைபெறுகிறது. ஆனால் தமிழ் மக்கள் தமது மரணித்துப் போன உறவுகளை நினைவுகூர்கின்றமை தடை செய்யப்படுகிறது. இதிலும்விட மோசமான இனவாத அரசொன்று இலங்கையில் இருந்திருக்க முடியாது. அரசாங்கம் தொடர்ச்சியாகத் தமிழ் மக்களைப் பல்வேறுபட்ட முனைகளிலும் அடக்கியாள முயற்சிப்பதுடன் அவர்களது கௌரவத்தையும் சிதைத்து அழிக்கின்றது. அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மாத்திரமல்லாமல் சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளும் கண்டிக்க முன்வரவேண்டும். எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை சுகாதார வழிகாட்டலைப் பின்பற்றி; தமிழ் மக்கள் தமது உறவுகளை நினைவுகூர்வதற்கு அரசாங்கம் வழிவிட வேண்டும். – என்றுள்ளது.

அத்துடன், வாகன ஆசனத்துக்கு மேலதிகமாக மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவில் பயணம் செய்தவர்களும் வழிமறிக்கப்பட்டு கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர்.

# நினைவுத் தூபியை உடைத்தழித்தவர்கள் யார் கோட்டா, வீரசேகரவிடம் பொன்சேகா கேள்வி



இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இருக்கும் முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி அடித்துடைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று இராணுவத்தினரும் பொலிஸாரும் கூறியுள்ளனர்.

அப்படியாயின் நினைவுத் தூபியை அடித்துடைத்தது யார்? பாதுகாப்புப் படையினரின் கண்களுக்குத் தெரியாமல் இரவு நேரத்தில் யார் வந்து நினைவுத் தூபியை அடித்துடைத்தார்கள்? பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோரிடம் மேற்படி கேள்வியை நான் கேட்க விரும்புகின்றேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி இடித்தழிப்புத் தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

போரில் உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாகவே நினைவுத் தூபி நிறுவப்பட்டிருந்தது. கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் மக்கள் அங்கு சென்று நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த எந்தவித தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால், இந்த அரசு நினைவேந்தல் நிகழ்வை நடத்தத் தடை விதித்தது மட்டுமன்றி முள்ளிவாய்க்காலில் நிறுவப்பட்டிருந்த நினைவுத் தூபியையும் அடித்துடைக்க வழியமைத்துக் கொடுத்துள்ளது.

நினைவுத் தூபியை அடித்துடைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ராஜபக்ஷ அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம் தமிழ் மக்களைப் பழிவாங்கும் விதத்தில் செயற்படுகின்றது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். – என்றார்.

# தனிமைப்படுத்தல் மீறிய 250 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 253 பேர் கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.



அதன்படி, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் இது வரையான காலப்பகுதியில் 9 ஆயிரத்து 282 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், பொதுமக்கள் இன்றைய தினமும் வீடுகளிலேயே தங்கி இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்கு அனுமதி உள்ளதாகவும் எனினும், இன்றும் அடையாள அட்டையை பயன்படுத்தி வெளியில் வர முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# மக்கள் பிரச்சினை தீர்க்க விசேட நடவடிக்கைகள்

போக்குவரத்து தடை விதிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாவட்ட ரீதியில் விசேட அவசர தொடர்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தில் திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகள்

## பலருக்கு எதிராக முறைப்பாடு பதிவு



வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தில் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் கண்காணிப்பு நடவடிக்கை நேற்று (சனிக்கிழமை) மேற்கொள்ளப்பட்டதுடன், பலருக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன. இலங்கையில் கொவிட் தொற்று பரவல் தற்போது தீவிரமடைந்து வருவதையடுத்து நாடு முழுவதும் 3 நாள்கள் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அத்தியாவசிய சேவைகள், மருந்தகங்கள் என்பனவற்றுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் முஸ்லிம் மக்களின் நோன்புப் பெருநாள் கொண்டாட்டங்கள் அமைதியான முறையில்



இடம்பெற்று வருகின்றன. இதனையடுத்து, வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்துக்கு சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து திடீர் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது குறித்த கிராமத்தில் முகக்கவசமின்றி பொது இடத்தில் விளையாட்டில் ஈடுபடல், மக்கள் ஒன்று கூடி இருந்தமை, வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தமை எனப் பல்வேறு செயற்பாடுகளில் அரச பயணத் தடை உத்தரவு மற்றும் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதியப்பட்டன.

## மணமகன் தேவை

1983 பிறந்த உதய செவ்வாய் (N) படித்த மணமகள் யாழ்ப்பாணம் படித்த மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு - 075 5047001

1993 இல் பிறந்த மணமகள் 7 செவ்வாய் பொருத்தமான மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு - 075 5047001

1979 பெண் விரிவுரையாளர் 5.5 உயரம் கி.பா 20 (V) பொருத்தமான மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு -075 5047 001

1994 மீனம் பூரட்டாதி அரசாங்க வேலை (BBA) தனியார் பெண் கோவியர் செவ்வாய் 5 பொருத்தமான மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு -075 5047 001

## மணமகள் தேவை

1988.11.03 ல் பிறந்த, வங்கி உத்தியோகம், படித்த ஆண் (MBA, BBA & BANKING DIPLOMA), செவ்வாய் 2, பாவம் 84, மணமகனுக்கு படித்த குணமுள்ள மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு - 075 5047001

1993 இல் பிறந்த 7 செவ்வாய் புதன் வியாழன் உள்ள சிங்கப்பூரில் இஞ்சினியராகப் பணியாற்றும் மணமகனுக்கு இஞ்சினியர் அல்லது முகாமையாளர், படித்த பெண் தேவை.
தொடர்புகளுக்கு - 075 5047001

1991 மணமகன் (AL) மீனராசி 9 செவ்வாய் வெள்ளாளர் அச்சகத்தில் பணியாற்றுபவர் படித்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு -075 5047 001

பிரான்ஸ் மணமகனுக்கு பிரான்ஸ் மணமகள் தேவை வயது 32.
தொடர்புகளுக்கு - 075 5047001

1981 இல் பிறந்த மணமகன் (கடை) பூராடம் நட்சத்திரம் பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு - 075 5047001

1986 இல் பிறந்த மணமகன் (கடை) விருச்சிகம் கேட்டை 4 செவ்வாய் பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு - 075 5047001

1988 மணமகன் சிங்க ராசி மக நட்சத்திரம் 7 செவ்வாய் 70 கி.பா. செங்குந்தர். வேறு மதத்தவர்கள் குலத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. நிரந்தர வருமானம் உண்டு. வீடு வாகனம் உண்டு.

1986 மணமகன் ராசி மகரம் 7 செவ்வாய் பள்ளர் சுவிஸ் அழகான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு - 075 5047 001

1980 இல் பிறந்த மிதுன ராசி மிருகசீரிட நட்சத்திரம் ஆண் வெளிநாட்டு மணமகன் (செங்குந்தர்) இலங்கை வந்துள்ளார். பொருத்தமான மணமகள் இருந்தால் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு -075 5047 001

1991 சித்திரை நாலாம் பாதம் ஆண் (V) BEng (Hons) பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு -075 5047 001

1988 தனுசு மூலம் தனியார் துறை வேலை ஆண் கோவியர் பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு -075 5047 001

## வீடு, காணி விற்பனைக்கு

தவசிக்குளத்தில் 36 பரப்பு காணி வீடு இரண்டு வெட்டுக்கிணறு தென்னை களுடன் கூடிய மரங்கள் விற்பனைக்கு. ஒரு பரப்பு 4.25 இலட்சம்.
**தொடர்புகளுக்கு - 0763614997**


# எதிர்க்கட்சியைப் பலப்படுத்தும் சதிக்கு சு.க. துணைபோகாது

## மஹிந்த அமரவீர திட்டவட்டம்

கொழும்பு, மே 16

எதிர்க்கட்சியினரைப் பலப்படுத்தும் எந்தவோர் அரசியல் தீர்மானங்களுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பு வழங்காது எனச் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தற்போதைய அரசைப் பலவீனமடையச் செய்ய எத்தனிக்கும் சிலர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் கூட்டுக்கு அழைக்கின்றனர். எமது கட்சி இதற்கு ஒருபோதும் துணைபோகாது.

இந்த அரசு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசனைகளையும் ஏற்றுக் கொண்டுதான் செயற்படுகின்றது. ஜனாதிபதியும், பிரதமரும் இணங்கித்தான் செயற்படுகின்றனர்.

இவர்களின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட அரசே தற்போது ஆட்சியிலும் உள்ளது.

நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் என்ற வகையில் அரசையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம்.

இதனால் நாம் ஒருபோதும் இந்த அரசைக் குழப்புவதற்கு அல்லது தற்போதைய அரசை மாற்றியமைப்பதற்கு உடன்படப்போவதில்லை.

எதிர்க்கட்சியினரைப் பலப்படுத்துவதற்கு எடுக்கப்படும் எந்தச் சூழ்ச்சிகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைக்காது.

எமது கட்சிக்காரர்களுக்கும், எமது கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன.

இந்தப் பிரச்சினைகளை நாம் அரசுக்குள்ளே பேசித் தீர்ப்போம். ஜனாதிபதியும், பிரதமரும் எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

எமது அமைப்பாளர்களுக்கு மக்கள் முன் சென்று தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்படவுள்ளன.

இவற்றை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எமது கட்சியின் அமைச்சர்களினூடாக முன்னெடுக்க முடியும்.



தற்போது நாம் இவ்வாறான ஒரு சில திட்டங்களைத் தயாரித்துள்ளோம். இவற்றுக்குத் தேவையான நிதியைப் பெற்றுத்தருகிறேன் என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வாக்குறுதியளித்துள்ளார்.

இந்த அரசில் உள்ள அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினூடாகவே அரசியலை ஆரம்பித்தனர்.

இதனால் இவர்களது உள்ளங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பான கௌரவமும் மதிப்பும் இருக்கவே செய்யும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயணத் தடை அமுலில் இருக்கும்போதே கரவெட்டியில் பிறந்ததின கொண்டாட்டம்

## 15 பேர் தனிமைப்படுத்தலில்

நாடளாவிய ரீதியில் பயணத்தடை அமுலில் இருக்கும் போது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 15 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிறந்தநாள் கொண்டாட்டம் இடம்பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து நெல்லியடி பொலிஸாருடன் சுகாதார பிரிவினர் அந்தப் பகுதிக்குச் சென்றபோது கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அங்கிருந்து தப்பி சென்றிருந்தனர்.

இந்நிலையில் பிறந்தநாள் கொண்டாடியவரின், தொலைபேசியில் காணப்பட்ட படங்களின் அடிப்படையில் அதில் உள்ள 15 பேரும் அடையாளம் காணப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

# கொவிட் தடுப்பு மையத்தில் வத்தளையில் முறுகல் நிலை

கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளை பிரதேசத்தில் கொவிட் தடுப்பூசி மையத்தில் நேற்று (சனிக்கிழமை) காலை பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

தடுப்பூசி பெற வந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வத்தளை பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வத்தளை – ஹெந்தல வீதியில் அமைந்துள்ள கெரவலபிட்டி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சினோபோர்ம் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்றும் தொடரும் என பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகளால் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், வந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டமையாலேயே இந்த முறுகல் நிலை ஏற்பட்டது.

# பொதுபலசேனா மீது அமெ. குற்றச்சாட்டு

பொதுபல சேனா அமைப்பு, இலங்கையில் சிங்கள பௌத்த பெரும்பான்மை மேலாதிக்கத்தை தொடர்ந்து ஊக்குவிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான அமெரிக்காவின் மதச் சுதந்திரம் தொடர்பான அறிக்கையில் இந்த குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள பொதுச் சமூக குழுக்களின் கூற்றுப்படி, சிறுபான்மை மதத்தினரைக் குறிவைத்து சமூக ஊடகங்கள் வெறுப்பு பிரசாரங்களைத் தூண்டின என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.


மானிப்பாய் பிரதான வீதிக்கு அருகில் 3 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 35 லட்சம்

யாழ்ப்பாணம் அத்தியடியில் 6 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு ஒரு பரப்பு 75 லட்சம்

மானிப்பாயில் 2 3/4 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 25 லட்சம்

**தொடர்புகளுக்கு - 0763614997**

மூளாய் வீதியில் பனைமரங்களுடன் கூடிய 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு ஒரு பரப்பு 5 லட்சம்.
தொடர்புகளுக்கு - 0753631663


பொதுபல சேனா போன்ற தேசியவாத குழுக்கள், பெரும்பான்மையினரின் மேலாதிக்கத்தை தொடர்ந்து ஊக்குவித்தன. அத்துடன் சிறுபான்மையினரையும் இழிவுபடுத்தின. இந்தநிலையில் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகத்திற்கு எதிராக வெறுப்பைத் தூண்டுவோருக்கு எதிராக இலங்கையின் அதிகாரிகள் செயற்படவில்லை.

2020, மார்ச் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் இணைய வெறுப்பு உரையை ஆராய்ந்த ஒரு தன்னார்வ தொண்டு நிறுவன அறிக்கையின்படி, அனைத்து தேசிய மொழிகளிலும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) இணைய வெறுப்பு பேச்சில் 58 சதவீதம் முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்துக்கு எதிரானவையாக இருந்தன, 30 சதவீதம் கிறிஸ்தவர்களையும், மற்றும் 5 சதவீதத்துக்கும் அதிகமானோர் தமிழர்கள் அல்லது இந்து மதத்தைத் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கெடுக்கப்பட்ட சிங்கள மொழி பதிவின்படி 79 சதவீதம் பேர் முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்தை தாக்கினார். தமிழ் மொழி இடுகைகளில், 46 சதவீதம் பேர் தமிழ் இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களையும், 35 சதவீதம் பேர் முஸ்லிம்களையோ இஸ்லாத்தையோ தாக்கினர்.

2020 ஜனவரியில் நடந்த ஒரு விசாரணையில், 76 மருத்துவ ஊழியர்கள் பல ஆண்டுகளாக முஸ்லிம் மருத்துவரான சியாப்தீன் ஷாஃபியால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சிங்கள பெண்களின் கட்டாய கருத்தடை பற்றிய அறிவைக் கூறி அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

இதனையடுத்து சந்தேகத்திற்கிடமான முறையில் செல்வத்தை குவித்ததற்காக ஷாஃபி கைது செய்யப்பட்டு 2019 இல் விடுவிக்கப்பட்டார். ஒரு சமூக ஊடகம் அவர் கருத்தடை செய்தார் என குற்றம் சாட்டியதை அடுத்து அவர் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

எவ்வாறாயினும், அவர் மீது எந்தக் குற்றமும் சுமத்தப்படவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, 2020 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், முஸ்லிம் வணிகங்களை புறக்கணிக்குமாறு சமூக ஊடகங்களில் அழைப்புக்கள் விடுக்கப்பட்டன. முஸ்லிம்கள் கொரோனாவை வேண்டுமென்றே பரப்பினார் என பொய்யான குற்றச்சாட்டுகள் எழுந்தன.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்ய அரசாங்கம் பரிசீலித்து வருவதாக 2020, நவம்பர் 10ஆம் திகதி வெளியான தகவல்கள் தொடர்பாகக் கருத்து தெரிவித்த பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், 'வஹாபி குழுக்கள் சமூகத்தில் ஊடுருவுகின்றன' என்று குற்றம் சுமத்தினார் என அமெரிக்காவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அருந்ததி

+94 777 164 524
www.arunthathee.com

## இணைய திருமண சேவை

### சூரியன் + செவ்வாய் உள்ள மணமகன் விபரம்

| | | |
|---|---|---|
| **17189\|வ\|1993**<br>பருத்தித்துறை\|இந்து<br>Assistant Manager\|HND<br>166 செ.மீ \|கு.செ:11<br>திருவோணம் (மகரம்) | **16739\|வே\|1991**<br>கிளிநொச்சி \|இந்து\|Qatar<br>Charted Accountant<br>178 செ.மீ \|கு.செ:02<br>அனுஷம் (விருச்சிகம்) | **17183\|வே\|1991**<br>நல்லூர்\|இந்து\|MA<br>Junior Executive at Bank<br>176 செ.மீ\|கு.செ:09<br>ஆய்யிலியம் (கடகம்) |
| **16817\|வே\|1991**<br>கைதடி\|இந்து<br>Proprietor \|A/L<br>155 செ.மீ \|கு.செ:01<br>அஸ்வினி (மேடம்) | **15658\|ந\|1991**<br>யாழ்.நகரம்\|இந்து<br>Proprietor\|NVQ<br>168 செ.மீ \|கு.செ:03<br>அவிட்டம் (மகரம்) | **11581\|வே\|1991**<br>கொக்குவில்\|இந்து<br>Engineer\|Canada<br>165 செ.மீ\|கு.செ : 06<br>மூலம் (தனுசு) |
| **17555\|வே\|1991**<br>கொழும்பு -06\|இந்து<br>Network Engineer<br>183 செ.மீ\| கு.செ:06<br>மூலம்(தனுசு)\|சண்டிலிப்பாய் | **17357\|வி\|1991**<br>யாழ்.நகரம்\|இந்து<br>Engineer<br>168 செ.மீ \| கு.செ:06<br>சதயம் (கும்பம்) | **14394\|வே\|1991**<br>நீர்வேலி\|இந்து\|Australia<br>170 செ.மீ\|கு.செ:02<br>Customer Service\|Degree<br>மிருகசீரிடம் (ரிஷபம்) |
| **15736\|வே\|1991**<br>நெல்லியடி \|இந்து<br>175 செ.மீ \| கு.செ:06<br>Technical Officer<br>திருவோணம் (மகரம்) | **11562\|வே\|1991**<br>கொழும்பு-06\|இந்து<br>178 செ.மீ \|கு.செ:11<br>Engineer<br>மூலம் (தனுசு) | **17612\|வே\|1991**<br>கரவெட்டி\|இந்து\|US<br>174 செ.மீ\| கு.செ:05<br>Assistant Manager\|A/L<br>கேட்டை (விருச்சிகம்) |
| **13728\|வே\|1989**<br>உடுப்பிட்டி\|இந்து\|Canada<br>170 செ.மீ \|கு.செ :11<br>Civil Engineer<br>பூரட்டாதி (கும்பம்) | **15541\|வே\|1989**<br>கொழும்பு-04\|இந்து<br>180 செ.மீ \|கு.செ :09<br>Doctor (Internship)<br>பூரட்டாதி (கும்பம்)\|இனுவில் | **12287\|வே\|1989**<br>இணுவில்\|இந்து<br>165 செ.மீ\|கு.செ :03<br>Engineer<br>கேட்டை (விருச்சிகம்) |
| **16550\|வே\|1989**<br>மல்லாகம்\|இந்து<br>170 செ.மீ \|கு.செ :02<br>Network Engineer<br>அனுஷம் (விருச்சிகம்) | **15269\|வே\|1989**<br>பருத்தித்துறை\|இந்து<br>188 செ.மீ\|கு.செ :09<br>Quantity Surveyor\|Bsc<br>விசாகம் (துலாம்) | **16712\|வே\|1989**<br>மட்டக்களப்பு\|இந்து\|Col-6<br>162 செ.மீ \|கு.செ:03<br>Software Engineer<br>திருவாதிரை (மிதுனம்) |
| **16400\|வி\|1989**<br>தெல்லிப்பழை\|இந்து<br>155 செ.மீ \|கு.செ : 04<br>Software Engineer\|A/L<br>பூரம் (சிம்மம்) | **16571\|வே\|1989**<br>இணுவில்\|இந்து<br>169 செ.மீ\|கு.செ : 07<br>Assistant Manger\|A/L<br>ஆய்யிலியம் (கடகம்) | **15444\|வே\|1989**<br>கரவெட்டி\|இந்து<br>175 செ.மீ\|கு.செ : 02<br>Regional Manager\|MBA<br>உத்திரட்டாதி (மீனம்) |
| **16733\|வே\|1987**<br>அம்பாறை\|இந்து<br>168 செ.மீ \|கு.செ : 03<br>Lecturer\|Msc<br>கார்திகை (ரிஷபம்) | **15766\|வி\|1987**<br>நல்லூர்\|இந்து<br>163 செ.மீ \|கு.செ : 06<br>Engineer<br>பூராடம் (தனுசு) | **13354\|வே\|1987**<br>யாழ்.நகரம்\|இந்து<br>175 செ.மீ\|கு.செ : 03<br>Accountant\|HNDA<br>மிருகசிரிடம் (மிதுனம்) |

### சூரியன் + செவ்வாய் உள்ள மணமகள் விபரம்

| | | |
|---|---|---|
| **16096\|வி\|1998**<br>கரவெட்டி \|இந்து<br>145 செ.மீ \|கு.செ: 06<br>A/L \|கேட்டை (விருச்சிகம்) | **15886\|க\|1998**<br>கொழும்பு-06\|இந்து<br>Trainee at Bank \| ACCA<br>162 செ.மீ \|கு.செ: 09<br>பரணி (மேடம்) | **17309\|வே\|1996**<br>தொல்புரம் \|இந்து<br>165 செ.மீ \|கு.செ: 11<br>உத்தரம் (சிம்மம்)<br>கொழும்பு<br>பூரம் (சிம்மம்) \| பட்டதாரி |
| **14748\|வே\|1996**<br>மானிப்பாய்\|இந்து<br>164 செ.மீ\| கு.செ: 07<br>Bank Officer\|CIMA<br>அவிட்டம்(மகரம்) \|Col | **16039\|வே\|1996**<br>கரவெட்டி\|இந்து<br>170 செ.மீ \|கு.செ: 05<br>Quantity Surveyor பூராடம் (தனுசு) | **16808\|வே\|1995**<br>சாவகச்சேரி \|இந்து<br>154 செ.மீ\|கு.செ : 12<br>BA\|மூலம் (தனுசு) |
| **14092\|வே\|1995**<br>பண்டத்தரிப்பு\|இந்து<br>153 செ.மீ \|கு.செ:05<br>Analyst\|Bsc\|Dehiwala<br>அனுஷம் (விருச்சிகம்) | **15985\|வே\|1994**<br>கரவெட்டி\|இந்து\| Canada<br>153செ.மீ \|கு.செ : 04<br>Accountant\|A/L<br>திருவாதிரை (மிதுனம்) | **12845\|வே\|1994**<br>சாவகச்சேரி\|இந்து<br>Data Process Analyst<br>பரணி (மேடம்)<br>165 செ.மீ\|கு.செ:08 |
| **12208\|வே\|1994**<br>மானிப்பாய\|இந்து\|Canada<br>155செ.மீ \|கு.செ : 02<br>Accountant\|(Diploma)<br>சதயம் (கும்பம்) | **17099\|வே\|1994**<br>தர்மபுரம்\|இந்து<br>158 செ.மீ \|கு.செ : 10<br>Manager (BA) யாழ்ப்பாணம்<br>அவிட்டம் (மகரம்) | **14257\|வே\|1994**<br>கொழும்புதுறை\|இந்து<br>153 செ.மீ \|கு.செ : 10<br>Assistant (A/L)<br>பூராடம் (தனுசு) |
| **13303\|வே\|1994**<br>வேலணை\|இந்து<br>155 செ.மீ \|A/L<br>அவிட்டம் (மகரம்)<br>கு.செ : 01 | **15673\|வே\|1994**<br>கண்டி\|இந்து \|கு.செ : 07<br>158 செ.மீ \|A/L<br>Public Relation Officer<br>விசாகம் (துலாம்) \| புத்தூர் | **17441\|ப\|1994**<br>ஏளாலை\|இந்து<br>175 செ.மீ \|கு.செ: 04<br>Accountant (Msc)<br>பூரம் (சிம்மம்) |
| **15128\|வே\|1993**<br>யாழ்நகரம்\|இந்து<br>167 செ.மீ \|கொழும்பு 06<br>Manager (ACCA) \|கு.செ:12<br>உத்தராடம் (மகரம்) | **16126\|வே\|1993**<br>யாழ்நகரம்\|இந்து<br>162 செ.மீ \|கு.செ : 06<br>Accountant (Bsc)<br>ரேவதி (மீனம்) கொழும்பு 06 | **16883\|வே\|1993**<br>தெல்லிப்பழை\|இந்து \|Col 06<br>165 செ.மீ\|கு.செ : 07<br>Finance Executive (Bsc)<br>உத்திரட்டாதி (மீனம்) |
| **16898\|வே\|1993**<br>கோண்டாவில்\|இந்து<br>161 செ.மீ \|கு.செ : 01<br>Searching (Degree)<br>சுவாதி (துலாம்) | **13512\|வே\|1993**<br>பருத்தித்துறை\|இந்து<br>160 செ.மீ \| \|கு.செ : 01<br>Nurse (Bsc Following)<br>சுவாதி (துலாம்) | **11767\|வே\|1992**<br>காரைநகர்\|இந்து<br>155 செ.மீ\|கு.செ : 09<br>Accountant (B.com)<br>பரணி (மேடம்) கொழும்பு 06 |
| **19079\|வே\|1992**<br>திருநெல்வேலி\|இந்து<br>150செ.மீ \|கு.செ : 09<br>ரேவதி (மீனம்)<br>Beautician (Diploma) | **13578\|கோ\|1992**<br>உடுவில்\|இந்து<br>158 செ.மீ \|கு.செ : 02<br>Project Manager (B.Tech)<br>உத்திரட்டாதி (மீனம்) | **13819\|வே\|1991**<br>பண்டத்தரிப்பு\|இந்து<br>151 செ.மீ\| \|கு.செ : 03<br>Development Officer<br>(BA) மூலம் (தனுசு) |



தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 23
இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு இலக்கத்தை (Profile No) Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2021 இல் வெளியிடப்பெற்றது.

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





அங்கம் 05

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

- செல்லத்துரை ரவீந்திரன் -

**20.தமிழருக்கு எதிரான அட்டூழியங்களுக்காக இந்தியா அவர்களின் ஒரு நேச நாடாக ஏதும் நடவடிக்கைகள் எடுத்ததா?**

ஆம் என்றும் இல்லை என்றும்தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

இரண்டுக்கும் இடையில் எமது சமகால அரசியல் வரலாறும் அடங்கும்.

**21.ஆம் என்றால் அது எதற்காக? இனப்படுகொலை என்பதாலா?**

ஆம், படிப்படியாக தமிழர்களுக்கு எதிராக உருவான மனித நேயமற்ற செயல்கள், அடக்குமுறைகள், மேற்கொண்டும் அதற்கான ஆயத்தங்கள் என்பதால் அது மேற்கொள்ளப்பட்டது. முன் கூட்டியே கணக்கெடுத்து ஓர் இனக் கொலையைத் தவிர்க்கும் நடவடிக்கையாக இது பார்க்கப்பட்டது. இது 1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தன் பின்னணியில் நடந்தது.

**22.அதன் பின்னணி என்ன?**

1983இன் இனக் கலவரங்களைத் தொடர்ந்து அரசியல் தலைவர்கள் தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்தனர். விடுதலைப் போராளிகளும் இந்தியாவின் அனுசரணையுடன் தங்கள் தளங்களை தமிழ்நாட்டிற்கு மாற்றி அங்கிருந்து இயங்கினர்.

1984ஐ தொடர்ந்த கால கட்டங்களில் தான், அரசியல் தலைமைகள், விடுதலை இயங்கங்கள் யாபேருமே “இனப் படுகொலை” என்ற வார்த்தைகளைப் பாவிக்க தொடங்கினார்கள். இந்தியாவின் அரசியல் மட்டத்தில அந்த அபிப்பிராயம் மேலெழுந்து, 1986ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமை மன்றத்தில் சிறிலங்காவில் நடப்பது ஓர் இனப்படுகொலை என்ற ரீதியில் இந்தியா கருத்து வெளியிட்டது.

1986 ஜனவரி முதலாம் திகதி விடுதலைப் புலிகள் வட பகுதியில் அரசின் சில சிவில் நிர்வாகங்களை முடக்கி தாங்கள் அதை நடத்த முற்பட இதனை அடக்குவதற்காக இரண்டாம் திகதி தொடக்கம் ஜனாதிபதி ஜே.ஆர். யாழ்ப்பாணக் குடா நாட்டை முடக்கி வாழ்வாதாரத்துக்குத் தேவையான எல்லா அத்தியாவசியப் பொருள்களுக்கும் தடை விதித்தார். இப்படியான முடக்கங்களால் தமிழர்களைத் தான் பட்டினி போட்டு மூன்று மாதத்திற்குள் பணிய வைப்பேன் என்றும், தற்போது அவர்களுடன் பேசுவதில் பயனில்லை, இராணுவத் தீர்வு ஒன்றே வழி என்ற தீர்மானத்திற்குத் தான் வந்து விட்டார் என்றும், அதனால் தனது படைவீரர்களுக்கு இனி புலிகள் என்றோ, சாதாரண குடிமகன் என்றோ தமிழ் மக்களிடையே வித்தியாசம் பார்க்க தேவையில்லை எனத் தாம் பணித்துள்ளார் என்றும், அவர்களின் உயிர்களைப் பற்றி இப்பொழுது தன்னால் கவலைப்பட முடியாது என்றும் இறுமாப்புடன் கொக்கரித்தார்.

விடுதலைப் போராளிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையில் வித்தியாசம் பாராட்டாது இன ரீதியாக, ஒட்டு மொத்தமாக அவர்களின் உயிர்களைத் துச்சமாக மதித்து இராணுவத் தீர்வு ஒன்றே வழி எனத் தமிழர்களைப் பட்டினிபோட வழி தேடியமையும் ஓர் இனப் படுகொலையின் முன்னேற்பாடுகள் என இந்தியா கணித்து, இலங்கையின் எதிர்ப்புக்களையும் மீறி வான் பரப்பில் உணவுப் பொட்டலங்களை வீசி, ஜே.ஆரைக் கட்டாயப் படுத்தி இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகத் தமிழர்களின் பாதுகாப்பை நிலை நிறுத்தவும் உள் நுழைந்தது.

பங்களாதேஷ் போல் தமிழீழத்தைப் பெற்றுத் தருவது இந்தியாவின் நோக்கமாக இருக்கவில்லை. ஆனால் வலுவான அதிகாரப் பரவலால் ஓர் இனத்தின் பாதுகாப்பை நிலைநிறுத்தி அதன் அழிவைத் தடுக்கலாம் என்ற எண்ணம் இருந்தது.

**23.இல்லை என்றால் ஏன்?**

வடமராட்சியிலும் பார்க்க பெரிதாக அழுகுரலும் ஒப்பாரியும் 2009 இல் இருந்தது. முறையான திட்டங்களுடனும் கட்டமைப்புக்களோடும் மஹிந்த ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்டு தமிழ்மக்கள் முல்லைத்தீவிலும் பின் முள்ளிவாய்க்காலிலும் முடக்கப்பட்டபோது இந்தியா எதுவித உதவியும் அவர்களுக்குத் தரவில்லை. பாராமுகமாக இருந்தது. இதற்குப் பல விளக்கங்களும் காரணங்களும் கொடுக்கப்படுகின்றன. ஆனாலும் மஹிந்த அரசின் கபட நாடகங்களும் அதற்குள் வீழ்ந்த இந்திய அரச அதிகாரிகளின் அணுகுமுறையுமே முக்கிய காரணங்களாக அமைந்தன.

விடுதலைப் புலிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபின், தான் 13 ஆவது சரத்தல்ல, அதற்கும் மேலேபோய் 13+ , ஏன்13++ ஆன சுய ஆட்சி கூடத் தமிழர்களுக்குக் கொடுப்பேன் என்று அவர் சர்வதேசத்துக்கும் இந்தியாவும் உறுதியளித்தார். இவை உத்தரவாதங்களாகக் கருதப்பட்டன. இவற்றுக்குப் புலிகளே தடைாக உள்ளனர் என்ற பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன.

1987இல் இந்தியாவின் தலையீடு அதன் பிராந்திய அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காகவே முக்கியமாக நடந்தது. தமிழரை மாத்திரமல்ல, முழு இலங்கையையும் தனது பிராந்தியக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும் என்ற இந்தியாவின் வெளிவிவகார நிலைப்பாடு வெளிப்படையானது. தமிழருக்கான அதிகாரப் பகிர்வு என்பது பிராந்திய நிலைகளை நிறுத்துப் பார்த்து சிறிலாங்காவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கத்துக்காக நடந்தது.

ஆனால் அதிகாரப் பகிர்வு மாத்திரம் காணாது, தமிழர்களின் இறைமை மீட்கப்படவேண்டும், அபிலாஷைகளை எதிர்கொள்ள இந்தியா உதவாது, ஆகவே, இந்தியாவை மீறி ஒரு சுதந்திர தமிழீழத்தை உருவாக்க முடியும் என்ற கணக்கெடுப்பை விடுதலைப் புலிகள் எடுத்தனர். அதைத் தொடர்ந்து இந்தியாவை எதிர்த்து ஒரு தனி நாட்டை நிறுவ நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் விளைவுகளே பேரழிவுகளும் தமிழ் மக்கள் முள்ளிவாய்க் காலில் சந்திக்க நேர்ந்தவையும் ஆகும்.

விடுதலைப் புலிகள் செய்த அளப்பரிய உயிர் தியாகங்களால், அவர்களின் விடுதலை வேட்கையினால், உலகத்தை எதிர்த்து எதுவும் செய்யலாமென்ற ஒரு தனி வழிக்கு இயலுமை, இயலாமை என்பதை பல புத்தி ஜீவிகள் கூட இடித்துரைக்காது, ஒத்துப்போயினர். சூழல்களைப் புரிந்துகொண்டு காரியமாற்றவில்லை. அதனால் விடுதலைப் புலிகளின் அழிப்பில் கண்ணாக இருந்த இந்தியா, அதன் திரையில் மஹிந்த ராஜபக்ஷ ஒப்பேற்றிய இனக்கொலையை, அழிப்புக்களை, தமிழ் மக்கள் வைத்த ஒப்பாரியை, கேட்டும் செவி சாய்க்காமல் இருந்தது.

**24.இந்தியா சுய நலத்தின் பேரால் தான் தமிழர்களுக்கு உதவுமானால், இந்தியாவை மேலும் நம்பிக் கொண்டிருக்கலாமா?**

உதவிக்கு வரும் எந்த நேச நாடும் ஒரு சுய நல அடிப்படையில்தான் வரும். அது அமெரிக்கா ஆகலாம். ஐரோப்பிய ஒன்றியமாகலாம். இந்தியாவாகலாம். அந்த உதவி, நீதி, நியாயம், அநீதி, தார்மீகம் என்ற நியாயத் தராசில் எடை போடப்பட்டு வருவதில்லை.

அந்த சுயநலத்திற்குள்தான் தமிழர் தங்களது அபிலாஷைகளை நெய்து ஒரு சேலையையோ, வேட்டியையோ, வஸ்திரத்தையோ பின்னிக் கொள்ள வேண்டும். இதுதான் யதார்த்தம்.

இந்தியா தன்னுடைய பிராந்திய வலுவிற்காக எந்தவொரு நாட்டையும் – இலங்கையும் கூட – தன்னுடைய ஆளுமைக்கு உட்படுத்த விரும்பாது. அதைத்தான் தற்போது அதனுடைய சீனாவுடனான புகைச்சலில் பார்க்கிறோம்.

பலவற்றை, தொப்புள்கொடி உறவுகள் உட்பட, கூட்டிக்கழித்துப் பார்த்தால் இந்தியாவின் அனுசரணை எமக்கு முக்கியமானது. தொடர்ந்தும் கோட்டாபய ராஜபக்ஷவின் முனைப்பில் நடக்கும் அட்டூழியங்களுக்கு முட்டுக்கட்டைபோட ஒரு நேச நாடாக இந்தியா முக்கியமானது. அப்படியான நடவடிக்கைகளுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் ஒன்று முக்கியமற்றது. சர்வதேசத்தின் தற்சமய மனச்சாட்சிகளின் உறுத்தல்கள், விளைவுகள் போதுமானவை.



(வளரும்)

# முகக் கவசம் இன்றி நிற்பவர்களைச் சுற்றிவளைத்து கைதுசெய்து வாகனத்தில் ஏற்றுவதை நிறுத்துங்கள்!



## பொலிஸ்மா அதிபர் அவசர பணிப்புரை

பொது இடங்களில் முகக் கவசம் இன்றி இருப்போரைச் சுற்றிவளைத்து, கைது செய்து வாகனங்களில் ஏற்றிச் செல்லும் நடைமுறையை நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரம ரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அமுல் படுத்தப்பட்டு வந்த கைது முறையை நிறுத்துமாறு விசேட சுற்றறிக்கை மூலம் பொலிஸ்மா அதிபர் பொலிஸ் நிலை யங்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

முகக் கவசம் அணியாதவர்களைக் கைது செய்து, தூக்கிச் செல்லும்போது, பொலிஸ் அதிகாரிகளுக்கும் கொரோனாத் தொற்று பரவும் அபாயம் இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இடத்திலும் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களை ஒரே வாகனத்தில் கொண்டு செல்வதன் ஊடாக கொரோனாப் பரவும் அபாயம் இருக்கின்றது எனவும் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், முகக் கவசம் அணியாதவர்களைப் பாதுகாப்பான முறையில் கைது செய்து, தனியான வாகனங்களில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் டெங்கு நோயும் தாண்டவம் இவ்வருடம் இதுவரை 7,317 நோயாளர்கள்

நாட்டில் இந்த மாதத்தில் இது வரையான காலப்பகுதியில் 430 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 317 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் அதிகமானோர் கடந்த ஏப்ரல் மாதத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் ஆயிரத்து 805 பேருக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இது வரையில் அடையாளம் காணப்பட்டவர்களில் அதிகமானோர் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 846 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து கொழும்பு மாவட்டத்தில் ஆயிரத்து 159 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு நோய் பரவும் அச்சம் அதிகரித்துள்ளது எனச் சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## அறிகுறிகள் தென்படாத தொற்றாளர்கள் வீட்டில் இருந்தவாறே சிகிச்சை பெறலாம்

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கூறுகின்றார்



பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட போதிலும் நோய் அறிகுறிகள் எவையும் வெளிகாட்டப்படாத நோயாளர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வீட்டிலேயே இருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவர் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

இவ்வாறு வீட்டிலிருந்து சிகிச்சை பெறுபவர்கள் விசேட மருத்துவ குழாமினால் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவர் என்றும், ஏதேனும் சிக்கலான நிலைமைகள் ஏற்படின் உடனடியாக குறித்த தொற்றாளரை வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

